222

222

தாரண வூ
ஆனி - ஆடி மீ

ஸம்புடம் - 3
ஸஞ்சிகை - 7

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

ப்ரசுரிக்குமிடம்:

... ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை

July, 1944
Vol. 3, No. 7

3L
Q22ணவ211, N41
N44·3·7
210127

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

பக்கம்

1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	206
2.	உண்மை வைணவன்	211
3.	உந்தி பறத்தல்	215
4.	திருப்பாவை	220
5.	ஸ்ரீ தேசிக வைபவம்	225
6.	செய்திகள்	229
7.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	231
8.	ப்ரஸ்நோபநிஷத்	185

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதி யனுப்புதல் நலமாகும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாசம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 3	தாரண வருஷ ஆனி - ஆடி மீ	ஸஞ்சிகை 7

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹ கருணோத்திதா |
ஸ்ரீ ந்ருஸிம்ஹ கடாக்ஷேண ஜீயாதாசந்த்ர தாரகம் ||
ந்ருஸிம்ஹ பக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவைகளைப் போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[4-ஆம் அங்கம்]

[ஸ்ரீ உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி, **M.A.B.L.,**
அட்வோகேட், திருச்சி]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 5, பக்கம் 146-ன் தொடர்ச்சி]

வஸந்தன் .—தோழா! நீ விரும்பும் இக்கக்ஷி வேதாந்த ஸம்மதமே யாகும். ‘த்வம் ஸ்த்ரீ த்வம் புமானஸி உத வா குமாரீ’ என்றது வேதம் ப்ரஹ்மத்தைப் பார்த்து. ‘ப்ரஹ்மமே நீ ஸ்த்ரீ’ என்று தானே முதலில் கூறிற்று. உபக்ரமம் ந்யாயம்; மிக்க பலம். முதல் பேச்சுத் தானே முக்யமாகும். முதல் பேச்சுத்தானே முக்ய கருத்துக்கு அடையாள மென்பர். ‘உத வா’, ‘அல்லது ஒருக்கால் புமான் என்று சொல்லலாம்’ என்கிற பின் பேச்சு, பூர்ண மநஸ்ஸில்லாத ஒரு வெறும் பக்ஷாந்தரப் பேச்சுத்தானே. கக்ஷிக்காக வேணுமென்று ஒப்புக் கொள்ளுவதுபோல் பேசுவதே.

யௌவநப் பெண்களது கண்களின் மெல்லிய அசைவோடு அழகிய மூலைப் பார்வைகளான கடாக்ஷ வீக்ஷணங்களும், ஸஹஜமான (அக்ருத்ரிமமான) விலாஸ மினுக்குகளும், முநீந்த்ரர்களின் மநஸ்ஸை நூற்றுக் கணக்கான ஶாஶ்வத ப்ரஹ்மங்களையும் தள்ளச்செய்து ஒரே பலமாய் இழுத்துவிடும். ப்ரஹ்மத்தின் கடாக்ஷங்களை ஏன் தேடுவர்? இந்த ப்ரத்யக்ஷ ப்ரஹ்மங்களின் மநோஹரமான கடாக்ஷங்கள் மற்றொன் றினைத் தேட இடந் தருமோ? ப்ரஹ்மம் அழகுக் கடலென்பர். அத்ருஶ்யமான பொருளின் அழகு விலாஸங்களை யார் கண்டார்? ‘ஏரார் முயல் விட்டுக் காக்கைப்பின் போவதே?’ அவர்கள் ஆழ்வார் களையே கேட்போம்.

காமன் :—தோழா, வஸந்தா! நீ பேசுவது பொய்யே யல்ல. என் ஸேனையை இதோ ஏவுகிறேன். இதோ இந்த அப்ஸரஸ்ஸுக் கூட்டம் என்ன அழகாக நர்த்தநம் பண்ணுகின்றது! ஸ்வபாவமாகவே அவர்கள் கண்ணழகிகள். இப்பொழுது நர்த்தநம் செய்கையில், இவர்கள் தங்கள் த்ருஷ்டிகளின் அபிநயங்களாலும் வீக்ஷணங்களாலும் கூர்மையான பாணவர்ஷங்களைப் புருஷன்பேரில் எறிகிறார்கள். இப்படிக் கூர்மை யான த்ருஷ்டி பாணங்களை மாரியாய் மன மென்னும் லக்ஷ்யத்தின்பேரில் தொடுக்கும் இவர்கள் ப்ரஹ்ம யோகத்திற்கு ஆசைப்படுமவனைச் சிறைப் படுத்த அனுப்புவோம். ‘வாராஷம் காங்க்ஷ தவாண்)ஹீ நயொமழ’

எல்லோரும் புண்ய யோகத்தை விரும்புவார்கள். அப்ஸரஸ்ஸின் யோகம் புண்யயோகம். ப்ரஹ்மம் புண்யாபுண்ய சூந்யம்; ‘[illegible]’ ஸுக்ருத துஷ்க்ருத மற்றது என்பர். புண்ய சூந்யமான ப்ரஹ்மத்தின் யோகத்தை (அணைதலை) விரும்பும் புருஷனுக்கு அதிபுண்யமான அப்ஸரோ யோகத்தைத் தருவோம்.

வஸந்தன் :—அழகிய இந்த அப்ஸரஸ்ஸுகள் உனக்குப் பணி செய்பவராயிருக்கையில் நம் கார்யம் ஜயமே. ப்ரஹ்ம யோகத்தை விரும்பும் யோகிக்கு இந்த யுவதிகளின் யோகம். இந்த யுவதிகளிடம் தந்மயத்வம்தான் ஸித்திக்கும். இவர்கள் பாடிக்கொண்டே அபிநயம் பிடித்து ஆடுகையில், காது இவர்கள் தேன்வார்க்கும் காநத்தில் லயிக்கும்; கண் இவர்கள் அழகிய அவயவங்களின் விலாஸ நர்த்தநத்தில் லயிக்கும்; இவர்கள் ச்ருங்கார பாவாபிநயங்களில் மநம் லயித்து அடிமைப்படும். யோக மென்பது லயம். ஏகாக்ரமாயிருந்து லயிக்கவேணும். இவர்கள் நர்த்தநம் செய்கையில் இவர்கள் ஆடலிலும் பாடலிலும் அங்கங்களிலும் தந்மயமாய் இந்த்ரியங்களும் மநஸ்ஸும் லயித்துவிடவே, மற்றொரு பொருளான ப்ரஹ்மத்தை எப்படி யோகி கண்ணெடுத்துப் பார்ப்பான்?

காமன் :—[சற்று ஆலோசித்துக் கோபச் சிரிப்புடன்] விவேகன் இப்பொழுது முயற்சியின் [வ்யவஸாயனின்] ஸஹாயம் பெற்றுக் கொழுப்படைந்து என்னை அவமதித்து யோகத்தில் ப்ரயத்நம் செய்வனேல், அவன் விடாமுயற்சியால் யோகமும் ஸித்திபெற்றாலும், ஸௌபரி யென்னும் யோக ஸித்தரைப்போல நூறு யுவதிகளை ஏககாலத்தில் அநுபவித்துக் காமத்தைத் தன் மநோரதத்திலும் அதிசயித்து வெள்ளப் பெருக்காய்ப் பெருகச் செய்வேன். யோகத்தால் ஈச்வரனை ஆராதித்து அணிமாதி ஐச்வர்ய ஸித்தி பெற்றாலென்ன? அந்த ஸித்தி யெல்லாம் என் மநோரத ஸித்தியை ‘[illegible]’ என்று பெருகச் செய்யத்தான் விநியோகப்படும். பல தேஹங்களை யோகஸித்தியால் ஸ்ருஷ்டித்துக்கொண்டு நூற்றுக்கணக்கான யுவதி பத்நிகளுடன் ஏக காலத்தில் போகத்தில் ஆசை. ஸௌபரி யோகி இதற்கு த்ருஷ்டாந்தம். ப்ரஹ்ம ஸூத்ரமும் முடிவில் ‘[illegible]’ என்று அணுவான ஜீவன் ஐச்வர்ய மஹிமையால் ஞானத்தால் பல சரீரங்களில் வ்யாபித்து அந்த சரீரங்களில் போகம் பெறுவதைக் காட்டிற்று. ஞானத்தால் வ்யாபித்துப் பல சரீர போகப் பெருக்கு. ‘யோக சாஸ்த்ரங்களில் இம் மாதிரி பல சரீரங்களைப் பரிக்ரஹித்து ஞானத்தால் வ்யாபித்துப் பல தேஹங்களில் இன்புறுவது ப்ரஸித்தம்’ என்று ஸ்ரீ சங்கர பாஷ்யம். யோகேச்வரனான க்ருஷ்ணனும் இதற்கு த்ருஷ்டாந்தம்.

வஸந்தன் :—இதென்ன விந்தை! உன் வீர்ய ப்ரபாவம் உலக ப்ரஸித்தம். கல்பக வ்ருக்ஷ புஷ்பங்களாகிற உன் பாணங்களின் தேனை அருந்தி மதித்துப் பாடும் பெண் வண்டுகளால் அமைந்த நாண் கயிற்

றைத் தநுஸாகவுடைய உன் பராக்ரமத்தைப் பணவம் வீணே வேணு முதலிய இனிய வாத்யங்களைப்போன்ற இனிய குரல்களால் குயில்களும் பாடுகின்றனவே. 'வண்டின முரலும் சோலை......குயிலினம் கூவும் சோலை' என்பதெல்லாம் உன் விஷயத்தில் பாடவேணும். நம் மஹாராஜா மஹாமோஹரின் மதிமயக்கும் கார்யத்தை என்போன்றவர் லகுவாய் ஸாதிக்கக்கூடும். அவஸரப்பட்டு நீ ஏன் அதில் இறங்கி ப்ரயத்நம் செய்ய வேணும்? ஒருக்காலும் வீண்போகாத் சரங்களையுடைய உன் வில் வளையவே வேண்டாம்; நாண் கயிற்றிலும் பாணத்தைத் தொடுக்கவேண்டாம். சூத வ்ருக்ஷம் முதலியவற்றின் சாகைகளில் பூத்திருக்கும் உன் அஸ்த்ரங்களை வஸந்த காலனுகிய நான், அந்தந்த வ்ருக்ஷங்களிலும் செடிகளிலும் காட்டுவதைக் கண்டே விவேகன் நடுங்கி ஓடுவனே!

காமன்:—எதிரி பலிஷ்டன். நம் உத்ஸாஹம் மந்தமா யிருக்கக் கூடாது. ஸூர்ய த்ருஷ்டாந்தத்தைப் பார். இருட்டைத் தொலைக்க எத்தனை ஸூர்ய கிரணம் வேணும்? ஆயினும் உதிக்கையிலேயே ஶத்ருவான இருட்டைத் தொலைக்கத் தன் ஆயிரம் கிரணங்களோடும் அவர் கிளம்புகிறு ரல்லவோ? இதுதான் தேஜஸ்விகளின் முறை. தோழா! அபஜயமென்பதே அஸஹ்யம். யுத்தத்தில் தோற்பது இருக்கட்டும். அது விளையாட்டில் தோற்ருலும் வாதத்தில் தோற்ருலும் எத்தனை விபத்துகள் வருகின்றன வென்பதைக் காவ்யங்கள் வர்ணிக்கின்றன.

வஸந்தன்:—ஏன் உன் ப்ரபாவத்தை நீ லகுவாய் நினைத்து உலகத்தை ஜயிக்கும் உனக்கு ஒருவரிட மிருந்தும் அபஜய லேஶத்தையும் ஶங்கிக்கிருய்? ஆயிரம் விட்டில் பூச்சிகள் சேர்ந்தாலும் ஸூர்ய தேஜஸ்ஸை அணைக்க முடியுமா? விட்டில் பூச்சிகள் தீப தேஜஸ்ஸை அணைக்க வென்று மேல் விழுகையில், தங்களையே தீப ஜ்வாலையில் ஹோமம்செய்து எரிகின்றன. காமாக்னியை அணைக்கப் பார்ப்பவர் அந்த அக்னியில் தங்களையே ஹோமம் செய்து காமனுல் பராஜிதராக வேண்டியதே. ரத கஜ துரக பதாதி என்று ஸேனை சதுரங்கம்; இத்தனையும் உன் ஸேனையாகிய பெண்களில்* அடங்கி யிருக்கிறது. அவர்கள் கட்டழகே பதாதி. அவர்கள் நடக்கும்பொழுது, அழகே நடப்பது போலுள்ளது. இந்த்ரியக் குதிரைகள் ஆநந்த நர்த்தநம் செய்கின்றன. மதுமதம் ஏறியபோது மத்த கஜங்களைப்போல அவர்களைக் கட்டிப் பிடிப்பதே அரிது. யானைப் படை இருண்டு வருவதுபோல, அவர்கள் மதத்தில் கண்கள் இருளும். புத்தியும் இருளும். அவர்கள் ரதி ரஸ மநோரதங்களே வேகமாய்ச் சுற்றிச் சுழலும் ரதங்கள். இந்த உன் ரதி கோலா

* "அற்புதன் அலர்மேல் மங்கை யாருயிர்க் கணவன் சேட
வெற்பினில் மடவாய் காம வேட்குநீ வெருவ லென்னே
பொற்பமர் தடங்கண் வாளி புருவவில் லல்குல் திண்தேர்
பற்பல கலந்தோய் கொங்கைப் பகட்டையும் படைத்தா யன்றே."
என்னும் பாசுரத்தின் ரஸம் இங்கு அநுபவிக்கத் தக்கது. [கோ. ஸ்வா.

ஹல சதுரங்க ஸேனை கூத்தடிக்கும்பொழுது, இந்த்ரியங்களை அடக்கும் ஸம்யம மார்க்கத்தில் ஆசையுடையவன் ஜீவிக்க முடியுமோ? விவேக ஸஹாயனான இப்புருஷன் இன்னம் யோகத்தில் உப்பரிகையில் ஏறிவிட வில்லையே. உபய விப்ரஷ்டனாய் நடுவில்தானே ஊசலாடுகிறான். ஸம் ஸார பயங்களையும் நினைக்கிறான்; ஸம்ஸார போகங்களை அநுபவித்ததை யும் மநஸ்ஸால் பாவித்து இன்புறுகிறான். பரப்ரஹ்மத்தைத் தேடுவ தில் இறங்கவும் ஆசை; ஸம்ஸார போக ஸம்ருத்தியிலும் ஆசை. இன்பக் கடலில் முழுகவும் ஆசை; அதில் வெட்கமும் படுகிறான். இவனுடைய யோகப்ரணிதானோபாயம் வெளுப்பும் கறுப்புமாய் [ஸத்வமும் தமஸ்ஸு மாய்] அபாயம் நிரம்பியே யிருக்கிறது. ஸாத்யோபாயம் ஸித்தோ பாயமா யிருக்கிறதென்று ரஸம்.

காமன் :—என் ப்ரிய ஸகனே! உன் பேச்சினால் இதுதான் எதிரி யைத் தூங்கும்போது வதம் செய்வதுபோல் எளிதில் வதம் செய்யும் ஸமய மென்றும் எனக்கு உபாயம் காட்டப்படுகிறது. இப்புருஷ னுடைய யோகம் பூர்ணமாகாமல் அரைகுறையா யிருக்கையிலேயே என் னுடைய ஸகல அஸ்த்ரங்களையும் இவன் பேரில் எறிய நல்ல தருணம். ராதை பிள்ளை கர்ணன். தேர் பள்ளத்தில் இறங்கியதால், அவன் கீழே இறங்க வெட்கப்பட்டிருக்கையில், விஜயன் தன் அஸ்த்ரங்களை யெல்லாம் அவன்பேரில் எறிந்து கொன்றதுபோல. விஜயன் காட்டிய உபாயத் தால் எனக்கும் விஜயம் ஸித்தம்.

வஸந்தன் :—உன் ஜயத்திற்குக் குறைவேது? தென்றல், சந்த்ரிகை, மல்லிகை, தேனைக் குடித்து மதித்த வண்டுகளின் மயக்க த்வநி, உன் ஜயக் கொடிகளோடு கூடிய முன் அநுபவித்த சிரிப்பு, இன்ப ரஸப் பேச்சுகள், லீலைகள் முதலியவற்றால் விசித்ரமாய் ஒருக்காலும் குன்றாத இனிப்பைத் தரும் யுவதிகளின் ஸுகபோகத்தைத் தந்த வ்ருத்தாந் தத்தைப் பற்றிய வெறுங் கதைப் பேச்சுப் போதாதோ? யோகியின் மனத்தைப்பற்றி இழுக்கையில் அவன் எப்படி அஸங்கனாவது? உன் பல மாகிய யுவதி பக்கத்தில் இருக்கவேணும். அவளோடு இன்புற்ற வ்ருத் தாந்தத்தை விடர்கள் கலந்து பேசினால் போதாதோ?

காமன் :—தோழா! எப்படியும் விவேகன் விவேசித்துப் பார்க் கத் தெரியாதவனே. விவேகியானால் மநோ வ்யாகுலங்களாலும் சரீர ரோகங்களாலும் மநோபலமும் தேஹபலமு மில்லாத இப்புருஷனை ஸமாதியில் ஆரூடனாகச் செய்வது, ஸமுத்ரம் தாண்டுவது, ஆகாயத்தைத் தாண்டி யப்பால் செல்வது, கானல் நீரைப் பாநம் செய்வது, தரையில் முழுகுவது போன்ற அஸாத்யமான வ்யாபார மென்று தெரியாமல், அதை ஸாதிக்க யத்நப்படுவனோ? புருஷனுக்கே முன் அநுபவித்த நம் ரஸங்களில் விடாத ச்ரத்தையால் அதைப் பற்றுவதிலேயே ஸம்ப்ரமமும் விஷய இன்ப ரஸமாகிய மத்யத்தைப் பாநம்செய்து மயக்கமு மிருக்கை

யில், அவனை இந்த இன்பத்திலிருந்து மோசநம் செய்யப் பார்க்கும் விவேகன் அம்ருதத்தோடு கலந்த பச்சை த்ராக்ஷைப் பழ ரஸம்போல் ஒரே இன்ப மயக்கத்தில் ஆழ்த்தும் ஸுர யுவதிகளின் ஹாவஹாவ விலாஸங்கங்களின் வலிமையை அறியாதவன். காமன் க்ரோதன் இருவரையும் ஜயித்து விடுவதாக விவேக மூடர்கள் பேசுகிறார்களே! அதெப்படி ஸாத்யமாகும்? விவேகன் உபதேசத்தாலும், கற்பனையாலும் வைராக்யத்தை ஸம்பாதிக்கிறவன், காமனாகிய என்பேரில் கோபித்துத் தீரவேணுமே. என்னைக் கோபித்தால் என் தோழன் கோபனுக்கு வசமாவான். என் பேரில் கோபியாவிட்டால், என்னை எப்படி விட முடியும்? எங்கள் இருவரையும் ஜயிப்பதென்பது ஒருக்காலும் முடியாத கார்யம். இது இருபுறமும் சிக்கவைக்கும் பாசக் கயிறு.

[இப்படி க்ரோதனைப் பற்றிக் காமன் பேசுகையில், கோபன் உக்ரமாய் வருகிறான். 'காம க்ரோத ப்ரஸமநப் பேச்சு வீணே' என்று காமன் பேசினதில் 'காம க்ரோத ப்ரஸமநம்' என்ற பேச்சு அவன் காதில் விழுந்து, யார் அப்பேச்சுப் பேச முடியுமென்று கூச்சலிடுகிறான்.]

காமன் :—அருமைத் தோழா! உன் வரவு நல்வரவாகுக. எதிரிகள் பேரில் ஓயாமல் மண்டி யெரியும் கோபமூர்த்தி நீ. நீ மஹாரதனான வீரன். ஸ்வாமி கார்ய ஜயத்திற்கு ஆலோசனை ஸமயத்தில் எனக்கு உதவிசெய்ய மநோரதத்தோடு வந்தாய். பைரவ ரென்னும் மஹேஸ்வரரையும் உன் வசமாக்கியவன் நீ. மஹாராஜாவின் ஜயம் ஸித்தம். நம் டம்பனுடைய ஆடம்பரம் வீணானாலும், மந்மதன் ஹிம்ஸிக்காமல் சும்மாயிருந்தாலும், மோஹ ராஜரின் உத்ஸாஹம் குறைந்தாலும், ஜீவனுடைய பாபக் காடுகள் எரிந்துபோனாலும், உள்ளேயுள்ள ஆத்மாவையே ஏகாக்ரமாய் த்யானிக்க உட்காரும் ஜீவனுக்கு, ஈஷத்து மாநக் குறைவைப் பிறர் செய்யும் வ்யாஜத்தைக் கொண்டு நீ கோபத் தீயைக் கிளப்பி எரியச் செய்யும்போது அவன் த்யாந யோகமும் எரிந்துபோம். நீ ஒருவன் போதாதா நம் ராஜாவுக்கு?

வஸந்தன் :—நீங்கள் இருவரும் கூடியது காற்றும் நெருப்பும் கூடியது போன்றது.

காமன் :—என் அப்ஸரஸ் ஸேனைக்கு முன் க்ரோதன் செல்லட்டும். என் தநுஸ்ஸில் நாணேற்றி இழுத்துக் கட்டித் தநுஸ்ஸோடு நான் பின் செல்லுகிறேன். நீ நாற்புறங்களிலும் ஜாக்ரதையாகக் கண் செலுத்திக்கொண்டு எங்கள் பக்கங்களைக் காத்துக் கொண்டுவா. [எல்லோரும் அப்படியே செல்லுகிறார்கள்.]

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

உண்மை வைணவன்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் M.A.,L.T. வித்வான், திருவையாறு]

[ஸம்புடம் 3: ஸஞ்சிகை 6, பக்கம் 185-ன் தொடர்ச்சி]

ஏரிக்கரையில் ஒருநாள் மந்தாகிநி ஸ்நாநம்செய்து சேலையைப் பிழிந்து அரையிற் கட்டிக்கொண்டிருந்தாள். தலைப்பை இழுத்துப் போர்த்துக் கொள்ளும்பொழுது பக்கலில் பாத்ரம் தேய்த்துக்கொண்டிருந்த பாஷ்யம் ஸ்வாமியின் தேவிகள், "ஏண்டி! இதென்னடீ ஸாமர்த்யம்! தலைப்பைத் தேவடியா ளாட்டமா விசிறி விசிறி மூஞ்சியெல்லாந் தண்ணியைச் தெறிச்சுட்டயேடீ! நன்னாயிருக்குதுடி ந்யாயம்! ஊருக்கு இப்படி அதிகாரம் செய்யரத்துக்கூன்னு வந்திருக்க யாக்கும்! ரொம்ப நன்னாயிருக்கு" என்று கர்ஜித்தாள். மந்தாகிநி நடுங்கிப்போய், "அம்மா! புடவையை நன்னாத்தான் பிழிஞ்சேன். காத்திலே ஒருவேளை உதறச்சே தெறிச்சிருக்கலாம். மன்னிச்சுக்குங்கோ" என்று கைகுவித்தாள். தீவ்ரமான கோபத்துடன் அந்த அம்மாள் மறுபடியும் ஸ்நாநம் செய்துவிட்டு, ஆத்திலும் யஜமானரிடம், மந்தாகிநி தன் முகத்தில் தண்ணீரை வாரி இறைத்ததாகவும் சொன்னாள். பாஷ்யம் ஸ்வாமியின் ப்ரத்வேஷம் எல்லையற்ற தாயிற்று. நிற்க:

மந்தா, தன் புருஷன் சென்னையில் ஆபீஸ் பணத்தைக் கையாடித் துர்விந்யோகப் படுத்தியதாகவும், அது ஸம்பந்தமாகக் கேஸ் நடப்பதாகவும் கேள்வியுற்றாள். மனம் கலங்கினாள். தவிர: அதற்காகத் தன் அகமுடையான் சிறையி லிருப்பதாகவும், ரூபாய் இரண்டாயிரம் கொடுத்தால் கையாடிய பணம் உளவடைந்துவிடு மென்றும், அப்பொழுதும் தண்டனை யடைவது திண்ண மென்றும் தெரிந்துகொண்டாள். கருணாகரனிடம் இதைச் சொல்லி "ஸ்வாமி! ஏதேனும் உபாயம்செய்து என் பூமிகளை விற்று அவருக்கு ஒரு வழி செய்யவேண்டும். ஸ்வேச்சையான வழிகளாலும், யோசனை யின்மையாலும், நல்ல சம்பளத்தையும் பதவியையும் பெயரையும் போக்கிக்கொண்டார் அவர். தேவரீரே சரணம்" என்றாள். கருணாகரன், தமக்குப் பரிசிதராயும் மஹா ஔதார்ய குணமுள்ளவராயும் தீநபந்துவுமான ஒரு வைஷ்ணவ ப்ரபு இருப்பதாயும், அவரிடம் வீடு நிலங்களை அடமானமாக வைத்துப் பணம் வாங்கிக் கொள்ளலா மென்றும் தைர்யங் கூறிச் சென்னைக்கு மந்தாகிநியுடன் புறப்பட்டார். பாகவதர்களின் ஸங்கல்பாதீநமாகவே பகவானும் வேலை செய்வான் போலும்! பணம் கிடைத்தது. பணத்துடன் இருவரும் சிறைச்சாலை சென்று அவனைக் கண்டனர். அவன் 'ஓ' வென்று கதறினான். தன்னைச் சேர்ந்த ஆண் பெண் நண்பர்களால் தான் அடைந்தவை பரிபவமும் பண நஷ்டமு

மென்றும், மஹா பதிவ்ரதையான மந்தாவை ஸங்கித்தது ஒருசிலர் விஷமத்தாலே யென்றும், இவ்வளவு பரிபவத்திலும் தன்னைக் காப்பாற்ற அவள் ஸர்வஸ்வத்தையும் விற்றுக்கொண்டு வந்ததையும் சொல்லிச் சொல்லிச் சிறு பிள்ளைபோல் அழுதான். மந்தாகினி கண்ணீருடன், "இதற்காக வருந்தவேண்டாம். சென்னையில் ஏதேனும் உத்யோகம் கிடைக்கும்; நாம் ஸௌக்யமா யிருக்கலாம்" என்றாள். அவன் விக்கி விக்கி, "இல்லை மந்தா! இந்தக் கேஸிலேயே தண்டனை யில்லாமற் போகாது. வேங்கப்பாக்கம் கொலைக்கேஸ் உனக்குத் தெரியுமா? அந்த முதலியார் கொலைக் கேஸில் என்னுடன் இருந்த சாரதா என்னும் தாஸி அப்ரூவராகி என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டாள். இவள் போதனையால் நான் அதில் இறங்கியபோதிலும் நான் கொலைக்காரனல்ல. நான் திருட்டில் ஸம்பந்தப்பட்டதுண்டு. எல்லாம் அந்தப் பாவிமுண்டை செய்தது. ஐயோ! நான் குடியன். நான் வெறியன். நான் பேயன். மந்தா! நீ நடமாடும் தெய்வம்" என்று தலையில் அடித்துக் கொண்டவண்ணம் மந்தாவின் காலில் விழப்போனான். மந்தாகினியின் தலை சுழன்றது. கருணாகரன் அவனைத் தாங்கிக் கொண்டு, "மந்தா! கலங்காதே. வருவது வரும். இந்தக் கேஸிலும் நன்மையே வரலா மல்லவா? ஆக, இந்தக் கேஸ் விசாரணை முடியும் வரையில் நாம் இங்கேயே இருக்கவேண்டும். இவரும் வெளிவர முடியாது" என்றார். மந்தாவும் ஸ்வாமியும் மதுராந்தகம் ஜாநகி யம்மாளின் க்ருஹத்திற் காத்திருந்தனர். கதையைப் பெருக்கி யென் பயன்? கேஸ் விசாரணையில் மந்தாவின் புருஷன் குற்றவாளிக்கு உடந்தையா யிருந்ததாக ருஜுவாயிற்று. ஆயுள் பர்யந்தம் தீபாந்தர சிக்ஷையும் கிடைத்தது. மந்தாகினிக்குத் தன் பதியிடம் காதல் அதிகமில்லை யென்றபோதிலும், கருணை எல்லையற்றதா யிருந்தது. அவனுடைய பெருந்தன்மையும் பூத தயையும் அவள் மநஸ்ஸை வாட்டின. தன்னைப் போல் உலகில் துக்கத்திற்கென்றே பிறந்தவர் யாரும் இருக்கமாட்டார்கள் என்று ஏங்கினாள். "ஸ்வாமி! நான் நிர்க்கதியானேனே!" என்று அலறினாள் மந்தா. கருணாகரன் சோகத்தை அடக்கிக்கொண்டு, "மந்தா! இப்படிப் பொறுமையின்றிப் பேசலாமா? ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் 'ஸுஹ்ருதஃ ஸர்வபூதாநாம்' என்று பாதுகாக்கக் கங்கணம் கட்டியிருக்கும் ஸ்ரீ பார்த்தஸாரதியின் தயையில் ஏன் அவநம்பிக்கைப்படுகிறாய்? அவன் செய்வதெல்லாம் ஹிதமே. அவன் செய்வதெல்லாம் ந்யாய்யமே. "யாவிதொ உவி ஷஉ ஹஸெக்ஷஃ நாஹிதம் காரயெஷ்யஸிஃ". "நான் இருக்கிறேன் மந்தா! என் குழந்தைகளை நான் ஹரிக்கவில்லையா? நீ அதிகமாய் விடுமா எனக்கு?" என்று ஸமாதானங்கள் சொன்னார். இருவரும் கரும்பாக்கம் போய்ச் சேர்ந்தனர்.

மந்தாகினியின் ஜீவநம் கருணாகரனது அதீநமாயிற்று. கருணாகரனது தேவிகளும் குழந்தைகளும் முணுமுணுத்தனர். கருணாகரன் அசையாத பர்வதம். தன் அந்தராத்மா ஸாதுவாய் நினைக்கும் எந்தக்

கார்யத்தையும் பிறர்க்காக விட்டுக் கொடுக்கமாட்டார். மந்தாவின் உடல் துரும்பாய் இளைத்தது. அவளைப் பார்த்தவர்கள், 'சில வர்ஷங்கள் முன்பு கரும்பாக்கத்துக்குச் சிரித்துச் சிரித்துக்கொண்டு ஸௌந்தர்ய வடிவாய் வந்த மந்தாகிநியா இவள் ?' என்று ஸந்தேஹிப்பார்கள்.

அநவரதமும் ஆழ்வார் பாசுரங்களைப் புலம்புவாள். "என் கருணை வடிவே! கண் நிறைந்த கடல்வண்ணா! உன்னைக் காணவும் பாக்ய மற்றேனே! கையில் காசுமில்லை, மனத்தில் உத்ஸாஹமு மில்லை. என் கண்ணா!

"ஊரிலேன் காணியில்லை உறவுமற் றொருவரில்லை
பாரில்நின் பாதமூலம் பற்றிலேன் பரமமூர்த்தி
காரொளி வண்ணனே கண்ணனே கதறுகின்றேன்
ஆருளர் களைகணம்மா அரங்கமா நகருளானே!"

என்பாள். என் அப்பா! நீ திருவுள்ளம்பற்றி என் உலக வாழ்வை முடிக்க வேண்டும். என் வாழ்வு போதும். பிறர்க்கு நிரந்தரமான களங்கமாய் வாழும் என்னை நீ கூவிக்கொள்ளவேண்டும். நான் அபலை. நான் பாபி.— சீசி! என்ன மதியீனம்! என் துயர் ஒரு துயரா? பிராட்டி என்ன பாடு பட்டாள்? என்ன வேதனைப் பட்டாள்? அந்த மஹாநுபாவையின் துயரமே உலகத்தைக் காத்தது. அம்மா! வேதவல்லி! நீ க்ஷமிக்கவேண்டும். உள்ளமட்டும் நீ வகுத்த வரம்பில் இருந்துவிட்டு, நான் அவஸ்யம் சேர வேண்டிய மஹாநரகத்தை எதிர்நோக்கித் தைர்யமாய் நிற்பேன். ஆயினும் வாஸுதேவா! நின் முகத்தைக் காணுங்கால் என் கண்கள் பனிநீர் மல்கும். நெஞ்சம் நெக்குருகும். பாபியான எனக்கு ஏன் இந்த மனப் பான்மை தந்தாய்? உன்பால் ஆதரம் பெருக வைத்தனையே. உன்னைக் காணவும் அருமையானையே. உன்னை நினைக்கில் என் உள்ளம் தேனூறித் தித்திக்குமே. "சங்கினோடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும் செங்கனிவா யொன்றினோடும் செல்கின்ற தென்னெஞ்சமே". கரிய கோவே! கற்பகமே! கார்முகிலே!

"கருமா முகிலுருவா! கனலுருவா! புனலுருவா!
பெருமால் வரையுருவா! பிறவுருவா! நினதுருவா!
திருமாமகள் மருவும்சிறு புலியூர்ச்சல சயனத்
தருமாகட லமுதே!உன த்டியேசர ணமே!"

என்று பெருங்கூப்பாடாக இன்னிசையோடு கதறினாள். ஆஹாரத்தை மிகவும் மட்டுப்படுத்திக்கொண்டாள். பொழுது புலருமுன் ஏரிக்கரைக்குச் சென்று நீராடி ஸந்திதிக்குப் போவது வழக்கம். பாஷ்யம் ஸ்வாமி ஒருநாள் புதிதாக அங்கே காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டிருந்தார். மந்தாவைக் கண்டவுடன், "என்ன பகவத் ஸேவை! என்ன ஞான பரிபாகம்! புருஷன் கொலைகாரன். தன் சரித்ரமோ கேட்கவேண்டியதில்லை. என்ன லோக ப்ரதாரணம்! கோயிலில் என்ன வேலை? இவர்களுக்காக நாம் கோவிலை விட்டுவிட்டால் தேவலை" என்று கர்ஜித்தார். மந்தாகிநி வாய்பேசாது வாசலிலேயே பகவானை வணங்கிவிட்டு வீடு

சென்றாள். அவள் ஸந்தோஷப்பட்டாள். பரிபவங்கள் அதிகமாக அதிகமாகப் பரந்தாமனிடம் மனப்பற்று வலுக்கிறது. 'இவ்விருள்தரு மா ஞாலத்தில் கருணாகரன்போல் சில ஸ்வாமிகளும் இன்னும் ப்ரகாசிப்பதே!' என்று சொல்லிக்கொண்டாள்.

ஒருநாள் இரவில் மந்தாகினி கருணாகரனை நமஸ்கரித்துப் போக வந்தவள், வெளி வாசற்படியில் நின்று சற்றுநேரம் பேசிக்கொண்டிருந்தாள். "ஸ்வாமி! என் வாழ்வை ஏன் இந்திராபதி நீட்டிக்கின்றான்?" என்றாள். கருணாகரன் "என்ன மந்தா! எத்தனை சொல்லியும் உனக்குப் படுகிறதில்லையே! உன் அனுப்பையும் உத்ஸாஹத்தையும் எதிர்பார்த்து ஸர்வமுக்தன் வ்யாபரிக்க வேண்டுமோ? ஒருசிறிது துக்கங் கண்டுவிட்டு, 'நான் போகிறேன் போகிறேன்' என்கிறாயே. நமக்காக அவன் பட்ட பாட்டிற்குப் பாபாத்மாக்களாகிய நாம் என்ன ப்ரதீகாரம் செய்யலாம்? ஒரு சிறையிற் பிறந்து, ஆயருடன் வளர்ந்து, கானக மெல்லாந் திரிந்து, தன் கரிய திருமேனி வாடப் பசுமேய்த்துத் தன்னை யாவரும் இகழ வெண்ணெய் களவுண்டு, தூது நடந்து, இங்ஙனம் அடியவர்க்காக அவன் நாட்டிற் படாதனபட்டதை நினைத்துப் பார்த்தாயோ? ஸ்ரீ ராகவனாய், மானமரு மென்னோக்கி வைதேவி யின்துணையாய்க் கானமருங் கல்லதர் போய்க் காடுறைந்தானே! மந்தா! ஸுகதுக்கங்களும் சோதனைகளும் ஸர்வேஸ்வரன் அளிக்கும் பூஷணங்களாய் நினைக்க வேண்டும்" என்றார். ஸ்வாமியின் தேவிகள் உள்ளிருந்து, "வந்துட்டாளா! வம்புப் பேச்சு ஊரெல்லாம் பரவித் தலைதூக்க முடியலே. அவளோடே என்ன பேச்சு! அவளுக்குத்தான் என்ன வெட்கங்கெட்டதனம்! 'குடித்தனம் பண்ற வீட்டில் காலைவைத்து ஓர் ஆண்பிள்ளையோடு பேசுகிறோமே' என்ற நினைவு கொஞ்சமேனும் உண்டா? ஊர் வம்பு பொறுக்க முடியலே. போடி வெட்கங்கெட்டவளே! உன்னாலே என் குடும்பமே அழியறது. கோவில் மாடுபோல தின்னுட்டு எங்கே ஆம்பிளேன்னு தேடி............" என்று கர்ஜித்து முடியுமுன், கருணாகரன் "ஐயோ! உனக்கு ஏன் புத்தி இப்படிப் போகவேண்டும்? போ உள்ளே. வரதா! வரதா! இப்படியும் புத்தி கெட்டுப்போய்விடுமா? இந்தப் பாமர ஜனங்களுக்கு எவ்வளவு சொல்வது? எவ்வளவு உபதேசிப்பது? அம்மா! மந்தா! ஒன்றையும் மனத்திற் கொள்ளாமல் ஆத்துக்குப் போ" என்றார். "ஸ்வாமீ! என் தாயல்லவா அவர். தேவரீர் தேவிகள் என்ற முறையில் என் தெய்வ மல்லவா" என்று சொல்லி மந்தா நகர்ந்தாள். ஸ்வாமியின் வீட்டில் பேரிரைச்சல் வெகுநேரம் அடங்கவில்லை. 'நான் இப்படிப் பிறர்க்குப் பாரமாய் ஜன்மம் எடுத்தேனே' என்று நொந்துகொண்டாள் மந்தா. கருணாகர ஸ்வாமியின் தங்கமான ஸ்வபாவம் சுடர்விட்டு ஜ்வலித்தது. [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீஶடகோபராமாநுஜ யதீந்த்ரமஹாதேஶிகாய நம:

உந்தி பறத்தல்

[ஸ்ரீமதி கோ. கல்யாணி அம்மாள், சைதாப்பேட்டை]

[ஸம்புடம் 3 : ஸஞ்சிகை 6 ; பக்கம் 192-ன் தொடர்ச்சி]

பத்மாவதி :—தசரதன் ஸ்வர்க்கம் போன சேதியைக் கேட்டுப் பரதன் அயோத்திக்கு வந்து அப்பாவுக்குச் செய்யவேண்டிய சரம கிரியை எல்லாம் செய்து முடிச்சான். பிற்பாடு அயோத்தி நகரத்து ஜனங்கள், வஸிஷ்டர் முதலான பெரியவாள், எல்லாரும் சேர்ந்துண்டு, "பெருமாள் காட்டுக்குப் போய்ட்டார்; தசரதனே ஸ்வர்க்கம் போய்ட்டான்; நாடு ராஜா இல்லாதெ இருக்கக்கூடாது; தசரதன் வரம் இருக்கிறதினாலும் ராமனும் இஷ்டப்பட்டிருக்கிறதினாலும் பரதனுக்கே பட்டாபிஷேகம் பண்ணிவிடலாம்''னு நிச்சயம் பண்ணிண்டு, அதுக்கு வேண்டியதெல்லாம் தயார் பண்ணிண்டு ஸித்தமா யிருந்தா. இந்த ஸங்கதி பரதனுக்குத் தெரிஞ்சுது. உடனே அவன் பெரியவாள் இருக்கிற அந்த ஸபைக்குப் போனான். வஸிஷ்டரைப் பார்த்துச் சொல்றான் :— "வஸிஷ்டரே! எனக்கு நல்ல ஹிதங்களைத் தான் நீர் போதிக்கிறீர். ரொம்ப அழகாயிருக்கு. இதைக் கேளும். நானும் ராஜ்யமும் ராமனுடைய உடமை. ஒத்தனுக்கு ரண்டு வஸ்துக்கள் உடமையாயிருந்தால், ஒன்னை இன்னொன்னு ஆளுமோ? 'நாட்டுக்கு நாதனில்லே'ன்னு ஒன்னை மாத்ரம் பாத்துட்டீரே தவிர, என் நிலமையை நீர் கவனிக்கலையே! வஸ்துக்கள் ஒன்னை இன்னொன்னு ஆள்வதானால், ராஜ்யம்தான் என்னை ஆளட்டுமே. உங்கள் வார்த்தையைக் கேட்டுண்டு நான் ராஜ்யத்தை ஆள ஆரம்பிச்சுட்டேனானால் நான் எங்க அப்பாவுக்குப் பிள்ளை ஆவேனா?'' என்னிப்படியெல்லாம் ரொம்ப அழஅழச் சொல்ல ஆரம்பிச்சான். அப்போ அவாளெல்லாம் பார்த்து, "பரதா! கடைசியாக நீ என்ன செய்யச் சொல்றே?''ன்னு கேட்டா. அப்போ அவன், "நாமெல்லாம் ஒன்னாச் சேந்துண்டு ராமன் கிட்ட போய் அவனை அழைச்சிண்டு வந்து அவனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணி வைக்கணும்'' ன்னு உறுதியாச் சொன்னான். அதைக் கேட்டு எல்லாரும் கிளம்பி சித்ரகூட பர்வதம் போய்ச் சேர்ந்தா. அப்போ பரதன் எங்க ராமன் கால்லே விழுந்து அழுதுண்டே, "அண்ணா! சடைமுடியை நீக்கிட்டு நாட்டுக்கு வந்து தேவரீர் திருமுடி சூடவேணும்; நான் உமக்குப் பங்காளியல்ல; தாஸன்; சிஷ்யன். தேவரீர் ஏவின பணியைச் செய்வேன். என்னை அநுக்ரஹிக்கணும்'' னு இப்படியெல்லாம் மன்னாடி கேட்டுண்டான். அப்போ ராமன், "பரதா! உன் வார்த்தையைக் கேட்டுண்டு

நான் நாட்டுக்கு வந்துடறேன்னு வைச்சுக்கோ. 'அப்பா வார்த்தையை அலக்ஷ்யம் பண்ணிட்டு ராஜ்யத்தின் மேலே ஆசை வைச்சிண்டு நாட்டுக்கு ஓடி வந்துட்டான்'னு நாலுபேர் என்னைத் தூத்துவா. தூத்துவாளா? மாட்டாளா? நீ சொல்லேன். தவிர: நம்ப அப்பா அம்மா வார்த்தையும் பொய்யாப் போய்டும். இன்னொரு பெரிய கஷ்டம் உனக்கு ஏற்படும். என்னன்னு கேக்கறையோ? "பரதன் முதல்லே அம்மாவைக் கொண்டு திருட்டுத்தனமாக ராஜ்யத்தை வாங்கிண்டான். அப்பறம் 'கல்'லென்னு லோகாபவாதம் ஏற்பட்டுப் போச்சு. அந்த பழியை நீக்கறத்துக்கு நேரில்வந்து ராமன் காலிலே விழுந்து நிர்ப்பந்திச்சு அவனை அழைச்சுண்டு வந்தான்"னு உன்மேலே குத்தம் சொல்வா. ஆகையினாலே எனக்கு அடங்கினவனாகவே (அடியவனாகவே) யிருந்துண்டு நீ ஊருக்குப் போ. நான் இப்போ வரவே மாட்டேன்"னு கட்டாயமாச் சொல்லிட்டான். அதுக்குமேலே பெருமாளுடைய பாதுகைகளை இரந்து மன்னடி கேட்டான் பரதன். தான் சீக்ரம் ஊர்க்கு வந்துடறத்துக்கு அடையாளமா யிருக்கட்டும்னு பெருமாளும் ரொம்ப ஸந்தோஷப்பட்டுண்டு தம் பாதுகைகளைக் கொடுத்தார். தாயார் தகப்பனரிடத்திலும் தம்பிகளிடத்திலும் என்ன கருணை பார் எங்க ராமனுக்கு. அவனைப் பாடுவோம் வா.

[6. முடியொன்றி மூவுல கங்களு மாண்டுஉன்
அடியேற்க ருளென் றவன்பின் தொடர்ந்த
படியில் குணத்துப் பரதநம் பிக்கன்
றடிநிலை யீந்தானைப் பாடிப்பற—
அயோத்தியர் கோமானைப் பாடிப்பற.]

மதுரவாணி:—எங்க க்ருஷ்ணன் குணத்தைக் கேளடீ. ஒரு குளத்திலே காளியன் என்ற பாம்பு இருந்துண்டு, அந்த ஜலம் மொத்தத்தையும் ஒத்தரும் சாப்பிடவொட்டாதபடி விஷமா அடிச்சிண்டிருந்தது. அந்த பாம்பை வெளியிலே ஓட்டி, அந்த ஜலத்தை நல்ல ஜலமாக்கி எல்லாரும் குடிக்கும்படியாப் பண்ணணம்னு நெனச்சு, எங்க க்ருஷ்ணன் அந்த குளத்தின் நடுவில் குதிச்சான். அப்போ அந்த நாகம் ஓடிவந்து தன் உடம்பாலே அவன் உடம்பு முழுவதும் சுத்திக்கிண்டது. அதைக் கொஞ்சம்கூட லக்ஷ்யம் பண்ணுதே க்ருஷ்ணன் ஒரு உதறு உதறித் தள்ளி அதன் வாலைப் பிடிச்சுத் தூக்கிண்டு, அதன் தலைமேலே காலை வைச்சிண்டு கூத்தாடினன். அந்த ஆட்டத்தை அது தாங்க முடியலை. அதுக்கு உயிரே போய்டும்போலே இருந்தது. தன்னை உயிரோடு விடவேணும்னு அது க்ருஷ்ணனை சரணகதி பண்ணிக் கேட்டுண்டது. அப்போ எங்க க்ருஷ்ணன் "ஐயோ பாவம்; பொழச்சுப் போகட்டும்"னு சொல்லி, அதுக்கு ப்ராணனையும் கொடுத்து அந்தக் குளத்திலிருந்தும் அதைத் துரத்தி ஓட்டிட்டான். அதனல் அந்த ஜலம் மொத்தமும் பசுக்களும் இடையர்களும் குடிக்கும்படி அம்ருத மயமாய் போச்சு.

என்ன தயை பாத்தயா எங்க கண்ணனுக்கு. அடி! பத்மாவதீ! நீல ரத்நமாட்டமா உள்ள எங்க கண்ணனுடைய தோள்வலியையும் வீரத்தையும் தயையையும் சொல்லிப் பாடுவோம் வாடி.

[7. காளியன் பொய்கை கலங்கப்பாய்ந் திட்டவன்
நீண்முடி யைந்திலும் நின்று நடஞ்செய்து
மீள வவனுக் கருள்செய்த வித்தகன்
தோள்வலி வீரமே பாடிப்பற.
தூமணி வண்ணனைப் பாடிப்பற.]

... REGISTRAR OF ... 3 AUG 1944 MADRAS

பத்மாவதி :—அடீ மதுரவாணி! எங்க ராமன் குணத்தைக் கேளடீ. என்னமோ அம்மா! அவன் பேரைச் சொல்லச்சே மநஸ்ஸுக்கு எவ்வளவு இன்பமாயிருக்கு. இவனுக்கு மேலேகூட தெய்வம்னு ஒன்னு உண்டா? இவன் குணத்தைச் சொல்றேன் கேளு. பரதன் சித்ரகூடத்தில் போய் அண்ணாவைக் கண்டு அடிவணங்கி, "திரும்பி அயோத்திக்கு வந்து முடிசூடணும்"னு ரொம்ப மன்றாடி கேட்டுண்டான். [இதெல்லாம்கூட முன்னையே ஒருதரம் சொல்லிருக்கேன்] அப்போ ராமன், தான் வர இஷ்டப்படாமல் தன் அடிநிலைகளை அவனுக்குக் கொடுத்து முடிசூட்டினான்.

மதுரவாணி :—ஏண்டி! அடிநிலைகளைக் கொடுக்கிறதாவது? முடிசூட்றதாவதடீ! ஒன்னும் விளங்கலையே.

பத்மாவதி :—அதுவா? பெருமாள் தம் பாதுகைகளைப் பரதனுக்குக் கொடுத்தார். அவன் அதை வாங்கிண்டு ஒரு சிரோபூஷணம் போலே தலையிலே அணிஞ்சிண்டான். இதுதான் மகுடாபிஷேகம். இதுதான் அரசாட்சி. ராஜ கிரீடம் என்னடீ இதைக்காட்டிலும் ஒசத்தி? "அரசமர்ந்தா னடிசூடு மரசையல்லால் அரசாக வெண்ணேன் மற்றரசு தானே" என்று ஸ்ரீ குலசேகரன் சொன்னது உன் ஞாபகத்துக்கு வரலை?

மதுரவாணி :—ஆமாம்டீ! ஆமாம்டீ! ந்யாயந்தான். அப்பறம்.

பத்மாவதி :—வஸிஷ்டர் பரதன் இவாளெல்லாம் நாட்டுக்குத் திரும்பி வரவேணும்னு ரொம்ப வேண்டினா ராமனை. அந்த அம்மா (கைகேயி) வார்த்தையையே மநஸ்ஸிலே வைச்சுண்டு அவன் காட்டுக்கு (தண்டகாரண்யம்) போய்ட்டான். அங்கே போய் என்ன கார்யம் செய்தான் தெரியுமா? கேள்.

ராவணனுக்குத் தங்கை ஒத்தி. சூர்ப்பணகைன்னு பேர். ராமன் காட்டிலே இருக்கச்சே, அவ தன் ராக்ஷஸ ரூபத்தை மறைச்சிண்டு அழகான ஒரு ரூபம் எடுத்துண்டு, 'என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ'ன்னா: அப்போ எங்க ராமன் "எனக்கு ஒரு பொண்டாட்டி இருக்கா; அவனுக்குத்தான் இப்போ ஒத்தருமில்லை. அங்கே போ"ன்னு இளையபெருமாளைக் காட்டினான். அவன் பார்த்து "அடீ! பைத்தியக்காரீ! நான் ராமனுக்கு அடிமை; நீ என்னைப் பண்ணிண்டா நீயும் என்னோடு சேந்துண்டு அவனுக்கு அடிமையாகத்தான் இருக்கணும். நீ அங்கேயே

போறது நல்லது" என்னுன். இப்படி ரண்டுபேரும் மாத்தி மாத்திச் சொல்லவே, அவ தன்னைப் பரியாஸம் பண்ருன்னு நினைச்சுண்டு, கோபத்தோடு தன் ஸ்வரூபத்தை எடுத்துண்டு ஸீதையைத் தூக்கிண்டு போய்டம்னு பார்த்தா. அப்போ எங்க ராமன் 'அவள் பொம்மனுட்டியாச்சே; கொல்லக்கூடாது'ன்னு காதையும் மூக்கையும் அறுத்து அவளை உயிரோடே விட்டுட்டான். என்ன கருணை பார். அவனைப் பாடுவோம் வாடி.

[8. தார்க்கிளந் தம்பிக் கரசிந்து தண்டகம்
நூற்றவள் சொற்கொண்டு போகி நுடங்கிடைச்
சூர்ப்பண காவைச் செவியொடு மூக்கவள்
ஆர்க்க *வரிந்தானைப் பாடிப்பற,
அயோத்திக் கரசனைப் பாடிப்பற.]

மதுரவாணி:—அதெல்லாம் சரிதான். எங்க க்ருஷ்ணன் சேதியை கேளு. நந்தகோபர் வீட்டு வாசல்லே ஒரு வண்டி விட்டிருந்தது. அதன் கீழே ஒரு தொட்டில்லே படுத்துண்டிருந்தான் க்ருஷ்ணன். கம்ஸனுடைய தூண்டுதலின்பேரில் ஒரு அஸுரப் பயல் அந்த வண்டிச் சக்கரத்திலே வந்து பூந்துண்டு, உருண்டுண்டே வந்து க்ருஷ்ணனை நசுக்கிக் கொன்னுடப் பார்த்தான். அப்போ க்ருஷ்ணன் இதை அறிஞ்சுண்டு, பாலுக்கு அழறாப்போல அழுதுண்டே தன் காலை மேலே தூக்கி ஒரு உதை கொடுத்தான் பாரு. உடனே அந்த வண்டியும் முறிஞ்சுது. அஸுரனும் செத்தான்.

இன்னும் கேள். நளகூபரன் மணிக்ரீவன்னு ரண்டு பேர். அவா குபேரன் பிள்ளைகள். அவா சில தேவ ஸ்த்ரீகளோடே கங்கா ஜலத்தில் ஒரு ஓடையிலே ஜலத்திலே விளையாடிண்டிருந்தா. அந்த ஸமயத்திலே நாரதர் அங்கே வந்தார். அப்போ அந்த தேவ ஸ்த்ரீகள் வெக்கப்பட்டுண்டு தங்க துணிகளை உடுத்திண்டு ஓடியே போய்ட்டா. ஆனு அந்தக் குபேரன் பிள்ளைகள் குடிவெறியினுலே துணியில்லாமலே நிர்வாணமா யிருந்திண்டிருந்தா. அப்போ நாரதருக்கு வந்துட்டது கோபம். "அடே மானங் கெட்ட பாவிகளா! நீங்க மருத மரமாய்ப் போங்கோ"ன்னு சாபம் கொடுத்தார். "க்ருஷ்ணன் திருவடி பட்ட மாத்ரத்தில் உங்க சாபம் நீங்கும்"னு சொன்னுர். கடைசியிலே நாரதர் சாபப்படி அந்த ரண்டு பேரும் க்ருஷ்ணன் வீட்டுக் கொல்லைப் பக்கத்திலே ரட்டை மருத மரமாக முளைச்சா. ரொம்ப நாள் கழிச்சு யசோதை க்ருஷ்ணனுடைய விஷமத்தை அடக்கிறத்துக்காக ஒரு தாம்பு கயத்தால் அவனை உரலில் கட்டிட்டு, "பயலே! இனிமேல் வீடுவீடாய் ஓடு பார்க்கலாம்"னு சொல்லி, நிம்மதியா தன் வேலையைப் பாத்திண்டிருந்தா. அப்போ க்ருஷ்ணன் அந்த உரலோடே அந்த மருத மரத்துக்குக் குறுக்காக

*இளைய பெருமாள் சூர்ப்பணகையை அங்கபங்கம் செய்திருக்க, இராமபிரான் செய்திருப்பதாக ஆழ்வார் கூறியது 'ராமஸ்ய தக்ஷிணோ பாஹு:' [லக்ஷ்மணன் இராமபிரானுடைய வலது திருக்கை] என்ற ந்யாயம் பற்றியாகும்.

தவந்துண்டே போனான். அவன் கால் பட்டவுடனே அந்த ரட்டை மருதமரமும் 'படார்'னு முறிஞ்சு விழுந்தது. அவாளும் சாபம் நீங்கித் தம்மூர் போய்ச் சேர்ந்தா.

இன்னொரு ஸங்கதி கேள். புல்லாங்குழல் ஊதிண்டே க்ருஷ்ணன் பசு மேய்க்கிற வழக்கம். பசுக்களுக்குப் புல்லும் ஜலமும்கூட ஆஹாரமன்னு. அவன் ஊதற புல்லாங்குழல் ஓசைதான் அதுகளுக்கு ஆஹாரம். மொத்தத்திலே ஒன்னு சொல்றேன். அதைக் கெட்டியாய் ஞாபகத்திலே வைச்சுக்கோ. பரமபதத்திலே இருப்பைக்காட்டிலும் பசு மேய்க்கிறத்திலேதான் எங்க கண்ணனுக்கு ரொம்ப ஆசை. அவனுடைய கார்யங்களைச் சொல்லிப் பாடுவோம் வா.

[9. மாயச் சகட முதைத்து மருதிறுத்து
ஆயர்க ளோடுபோ யாநிரை காத்தணி
வேயின் குழலூர்தி வித்தக னாய்நின்ற
ஆயர்க ளேற்றினைப் பாடிப்பற
ஆநிரை மேய்த்தானைப் பாடிப்பற.]

பத்மாவதி:—அடி மதுரவாணி! உங்க க்ருஷ்ணனுக்குப் பசுவண்டை ரொம்ப ப்ரியம்னு சொன்னையே. பசுவாவது ஸாது ப்ராணி. குரங்கு கட்டுக்கு அடங்குமா? எங்க ராமன் அப்படிப்பட்ட குரங்குகளோடு ஸ்நேஹம் பண்ணினான் பாத்துக்கோ. அதுமட்டுமா? அந்த குரங்குகளைக்கொண்டு மலைகளையெல்லாம் பேத்துப் போடச் சொல்லி ஸமுத்ரத்தில் அணை கட்டினான். அதன் வழியாகவே லங்கைக்குப் போய், —அங்கே ஆண்டிண்டிருந்தானே ரொம்ப கர்வம் பிடிச்ச ராவணேசுவரன்—அவனுடைய பத்துத் தலைகளையும் ஒரே பாணத்தாலே பனங்காய் போல் அறுத்துத் தள்ளி உருள அடிச்சான். அவன் தம்பி விபீஷணனுக்கு லங்கா ராஜ்யத்தைக் கொடுத்து முடிசூட்டினான். அயோத்தி மன்னனாகிய அந்த ஆராவமுதனைப் போற்றித் துதிப்போம் வா.

[10. காரார் கடலை யடைத்திட் டிலங்கைபுக்(கு)
ஓராதான் பொன்முடி யொன்பதோ டொன்றையும்
நேரா வவன்தம்பிக் கேநீ ளரசீந்த
ஆரா வமுதனைப் பாடிப் பற
அயோத்தியர் வேந்தனைப் பாடிப் பற.]

இப்பதிகத்தைக் கற்பதனால் ஆகும் பயன்

ஒளிபொருந்திய ஆபரணங்களை அணிந்த இரண்டு பெண்கள் ஒருவர்க்கொருவர் எதிரில் இருந்துகொண்டு க்ருஷ்ணாவதாரத்தைப்பற்றி ஐந்து பாசுரமும், ராமாவதாரத்தைப்பற்றி ஐந்து பாசுரமும் சொல்லியதாகப் பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பத்துப் பாசுரங்களையும் படிப்பவர்க்கு ஸம்ஸார துக்கம் எப்போதும் உண்டாகாது.

[11. நந்தன் மதலையைக் காகுத்தனை நவின்(று)
உந்தி பறந்த வொளியிழை யார்கள்சொல்
செந்தமிழ்த் தென்புது வைவிட்டு சித்தன்சொல்
ஐந்தினோ டைந்தும்வல் லார்க்கல்ல லில்லையே.]

2/6/27

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

திருப்பாவை

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, அட்வோகேட்,
திருப்பாப்புலியூர்]

(ஸம்புடம் 3: ஸஞ்சிகை 4: பக்கம் 130-ன் தொடர்ச்சி)

இவ்வாறு கண்ணழகு வாய்ந்த ஒரு ஸகியை எழுப்பி யழைத்துக் கொண்டு, பிறகு பேச்சிற் பெரியவள் ஒருத்தியை யெழுப்புகிறாள்.

14. உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினகாண்
செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும்
நங்கா யெழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்.

உங்கள் புழைக்கடை தோட்டத்து வாவியுள் - உங்கள் வீட்டுப் புறக்கடையிலுள்ள தடாகத்தில்; செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து - செங்கழுநீர்ப் புஷ்பங்கள் விகஸித்து; ஆம்பல் வாய் கூம்பின காண் - கருநெய்தல் புஷ்பங்கள் ஸங்கோசத்தை அடைந்திருக்கின்றன பார். இது ஸூர்யோதயத்துக்கு ப்ரத்யக்ஷமான லக்ஷணம். 'இது உனக்கு ஸமீபத்திலேயே ஸர்வலோக ஸாக்ஷிகமாகத் தென்பட்டும், நீ அதை உணராமல் உறங்குவது என்ன ஆச்சரியம்! விவேகமற்ற புஷ்பங்கள் கூடக் காலமறிந்து தஶாபேதங்களை அடைவதை ப்ரத்யக்ஷமாய்க் கண்டும், விவேகியான நீ இவ்வாறு இக்காலத்துக்கு அநுகுணமாக உறங்கிக் கிடப்பது சிறிதும் யுக்தமல்ல' வென்று, குறித்த காலாதிக்ரமத்துக்கு மற்றுமோர் அடையாளத்தைக் குறிக்கிறாள்.

செங்கல் பொடி கூறை வெண் பல் தவத்தவர் தங்கள் திரு கோயில் சங்கு இடுவான் போதந்தார் - காவித் துணி கட்டி வெண்மையான பற்களுடன் கூடிய பண்டாரங்கள் தாங்கள் ஸேவகம் செய்யுமதான தேவதாந்தரங்களின் ஆலயங்களுக்குச் சங்கூதுவதற்காகப் போகிறார்கள். இதுவும் நன்றாகப் பொழுது விடிந்ததற்கு அடையாள மென்று கருத்து. இங்குள்ள வர்ணந க்ரமத்தைச் சற்று நோக்குங்கால், ஆண்டாள் அதி சதுர பரிஹாஸ கர்ப்பமாய் இவ்வாறு கூறியதாகத் தோன்றுகிறது. இவ் வதிகாரிகளுக்கு பரிவ்ராஜக லக்ஷணம், காவி வஸ்த்ரம் சுக்ல தந்தம் இவ்விரண்டும் மாத்ரம் போதுமென்று தாத்பர்யம். இவ்வபிப்ராயம், ஸ்ரீ ஹரிவம்ஶம் பவிஷ்ய பர்வத்தில் ஸ்ரீ வ்யாஸ பகவான்,

"ஶுக்லதந்தா ஜிதாக்ஷாஶ்ச முண்டா: காஷாயவாஸஸ: |
ஶூத்ரா தர்மம் சரிஷ்யந்தி ஶாக்யபுத்தோபஜீவிந: ||"

என்று அருளிச் செய்திருப்பதை ஒத்ததாகும்.

'தவத்தவர்' என்றதால், 'இவை யிரண்டுமே இவர்கள் செய்யும் தபஸ்ஸாகும்; இவை தவிர வேறு தபஸ்ஸொன்றும் இவர் அறியார்' என்பது கருத்து. அதாவது: இவர்கள் அவர வர்ணஸ்தர்களாகையால் பரிவ்ராஜ்யைக்கு ஶாஸ்த்ர முறைப்படி அதிகார மில்லாதவரா யிருந்தும், கேவலம் ப்ருதக் ஜனங்களின் அஜ்ஞாநத்தை அவலம்பமாகக் கொண்டு பரிவ்ராஜக வேஷம் பூண்டு லோகத்தை ப்ரதாரணம் பண்ணுகிறார்கள் என்று அபிப்ராயம். 'தங்கள் திருக்கோயில்' என்றதால், திருவில்லாத் தேவர்களின் கோயில்களைக் குறித்து ஸாங்கேதிகமாக 'சிவ பாகவதர்' என்பதுபோல் 'திருக்கோயில்' என்கிற வ்யவஹாரம் ஏற்பட்டிருக்கிறதென்று தாத்பர்யம். இவர்கள் பிடிவாதமாகவே எப்போதும் 'திரு' பூர்வகமாகவே எல்லாவற்றையும் வ்யவஹரிக்கிறார்கள் என்பதும் ஸூசிதம். 'இப்படி அவரவர்கள் தங்கள் தங்கள் தேவாலயங்களுக்குப் போகும் போது வரிஷ்டையான நீ உறங்கலாமா?' வென்று ஸூசிதம்.

எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும் நங்காய் - 'இவ்வளவு நேரஞ் சென்றும் இன்னும் விழியாமல் தூங்கிக் கொண்டிருக்கும் பெண்ணே! நேற்று நீ எல்லோருக்கும் முன் எழுந்து மற்றவர் அனைவரையும் கூவி எழுப்புவதாக வீரம் பேசினையே' என்றபடி.

நாணாதாய் நா உடையாய் - 'வீண் பெருமை பேசினோமே' என்கிற வெட்க மில்லாமல் உறங்குகிறாயே; எழுந்திராய் - நீ எழுந்திரு.

சங்கொடு சக்கரம் ஏந்தும் தட கையன் பங்கயம் கண்ணனைப் பாட - சங்க சக்ரங்களைத் தரித்த தீர்க்க பீவர பாஹுக்களையுடைய புண்டரீகாக்ஷனைப் பாட. இதனால் நீ நாப் படைத்தது ஸார்த்தகமாகும்; முன் செய்த வ்ருதா ஜல்பநத்துக்கு ப்ராயஶ்சித்தமுமாம் என்று தாத்பர்யம். 'பாட' என்று வைத்தால் பாடுவதற்காக எழுந்திராய் என்று அந்வயம்.

ஏல் ஓர் எம் பாவாய் - முன்போலவே.

இவ்வாறு இவளை எழுப்பி யழைத்துக்கொண்டு, பிறகு தூக்கம் விழித்தும் சோம்பலினால் படுக்கையை விட்டு எழுந்திராம லிருக்கும் ஒரு ஸகியைக் கூவுகிறார்கள்.

15. எல்லே இளங்கிளியே யின்ன முறங்குதியோ
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார்போந் தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.

எல்லே - ஸகியே!; 'ஹலா' என்கிற ப்ராக்ருத ஸம்போதநம் த்ராவிடத்தில் 'எல்லே' என்று திரிந்ததாகக் காண்க. இளங்கிளியே-

பச்சிளங் கிளிபோல் இனிமையாகப் பேசுகின்றவளே! இன்னும் உறங்குதியோ -இன்னமும் நீ தூங்குகிறாயோ? சில் என்று அழையேல்மின்- நான் விழித்துக்கொண்டுவிட்டபடியால் கூச்சல் போட்டு அழைக்க வேண்டாம்; நங்கைமீர் - பெண்மணிகாள்!; போதர்கின்றேன் - வருகின்றேன். இப்படி இவள் வாய்ப்பேச்சால் மட்டும் எழுந்து வருவதாகச் சொல்லுகிறாளே தவிர, செய்கையில் எழுந்திராமல் முன்போலவே படுத்திருப்பதைக் கண்ட தோழிகள், 'வல்லை யுன் கட்டுரைகள் பண்டே யுன் வாயறிதும்' என்று உபாலம்பம் பண்ணுகிறார்கள்.

உன் கட்டுரைகள் - உன்னுடைய அஹ்ருதயமான பேச்சுக்களில்; [அதாவது: க்ரியாம்சத்தில் காணப்படாமல் கேவலம் சப்த மாத்ரநிஷ்டமாயிருக்கும் (கட்டிச் சொல்லும்) வார்த்தைகளில்]; வல்லை - ப்ரலோபநம் பண்ணத்தக்க சாதுர்யம் வாய்ந்தவளாக இருக்கிறாய்.

பண்டே உன் வாய் அறிதும் - முன்னமேயே உன் ஸாமர்த்யத்தை யாம் அறிவோம். ஊஃ ப்ரதமமா யிருந்தால், 'ஒருக்கால் நாங்கள் உன் பேச்சை நம்பிப் போய்விடுவோம். அப்படிக்கில்லாமல் உன் வார்த்தைகள் கேவலம் ஸ்ரோத்ரு தர்ப்பணமே தவிர க்ரியாந்வயி அல்லவென்று முன் அநுபவத்தால் எங்களுக்குத் தெரிந்தபடியால், நீ எதிர்பார்க்கிறபடி நாங்கள் ஏமாந்து போய்விடமாட்டோம்; உன்னை அழைத்துக் கொண்டே போகவேணுமென்ற த்ருட ஸங்கல்பத்துடன் வந்திருக்கிறோம்' என்று கருத்து. தூக்கம் விழித்தும் சோம்பலினாலும் குளிருக்கு அஞ்சியும் படுக்கையிலிருந்துகொண்டே கூடியவரையில் எழுந்திருப்பதை விளம்பிக்கும்படி செய்வதற்காக ப்ரயத்நப்படும் ஸ்வபாவம் இங்கு வெகு அழகாக உதாஹரிக்கப்பட்டிருப்பது காவ்யஜ்ஞர்களுக்கு ஹ்ருதய ஹாரியாயிருக்கும். இப்பெண் இவ்வாறு கபடமாகவே தவக்கம் செய்கிறாள் என்பது அறிந்தே தோழிகள் அவளைப் பல ப்ரகாரமாய் ப்ரரோசநம் செய்கிறார்கள். 'நங்கைமீர்' என்று பஹுமாந புரஸ்ஸரமாய் ஸம்போதநம் செய்து, 'சில்லென் றழையேன்மின்' என்றதால், 'நீங்கள் குரல் கொடுத்து அழைக்கும் ஸ்ரமத்தை என் விஷயத்தில் எடுத்துக் கொள்ளவேண்டிய அவஸ்யமில்லை. நான் வருவதற்கு ஸித்தமாயிருக்கிறேன்' என்று அவர்கள் அர்த்தங் கொள்ளவேண்டுமென்று நினைத்துப் பேசினபடியாம். உண்மையில் இவர்கள் கூச்சலிட் டழைப்பது தான் படுத்திருப்பதற்கு உபரோதமாவதால், அவர்கள் சப்தம் ஸஹியாமல் எப்படியாவது நல் வார்த்தை சொல்லித் தோழிமார்களை மயக்கி யனுப்பிவிடவேண்டுமென்று கருத்து. இதை அறிந்து அவர்கள், இவளுடைய வார்த்தை விஸ்வாஸார்ஹமல்லவென்று உபாலம்பம் பண்ணத் தொடங்கினது கண்டு, ப்ரத்யுபாலம்பநம் செய்ய ப்ரவ்ருத்தையாய்க்கொண்டு 'வல்லீர்கள் நீங்களே' என்று பதில் சொல்லுகிறாள்.

வல்லீர்கள் நீங்களே - என்றதற்கு, 'நீங்கள்தான் வாக் சாதுர்யம் உடையவர்கள்; நானன்று' என்று அர்த்தம். இது அவர்களுடைய உபாலம்பநம் பொறுக்காமல் அவஸமாய்ச் சொன்ன ப்ரத்யுக்தியே தவிர பராமர்ஸ பூர்வமாய்ச் சொன்னதன்று. பிறகு சற்றுப் பராமர்சித்து இதற்கு அவர்கள் கோபத்துடன் பதில் சொல்ல, மேன்மேலும் பேச்சு வளர்ந்து தன் உத்தேசம் நிறைவேறாமற் போய்விடும் (அதாவது: தான் இன்னும் சிறிதுகாலம் படுத்திருப்பது ஸாத்யப்படாமல் போய்

விடும்) என்று சங்கித்துப் பேச்சு வளராவண்ணம் அவர்கள் சொன்னதை அப்யுபகமம் பண்ணிக்கொண்டு 'நானேதான் ஆயிடுக' என்கிறாள்.

நானேதான் ஆயிடுக - 'காங்க்ஷைவ வாக்ய மஹோதி ஹவதா' என்று அகாமாநுமதி செய்கிறாள். இத்தாலேயாவது இவர்கள் தொல்லை ஒழியுமோ வென்று நினைக்கிறாள். இதை யறிந்த தோழிகள் 'அப்படியானால் நமக்குள் விவாதம் நீங்கிற்று ; உடனே நீ புறப்படவேண்டியதுதான் அவஶிஷ்டம்' என்று ஆநந்தங்கொண்டு, ஒல்லை நீ போதாய் - நீ விரைவில் புறப்படு என்றார்கள். இதற்கும் அவள் எழுந்திராமலிருக்கக் கண்டு, உனக்கு என்ன வேறு உடையை—நீ வேறு என்ன அதிசயத்தைக் கொண்டிருக்கிறாய் ? என்று வினவுகிறார்கள். 'இவ்வண்ணம் நீ அகாரணமாய் விளம்பிப்பதைப் பார்த்தால் எங்கள் கூட்டத்திற் சேர இஷ்ட மில்லாமல் நீ தனிப்பட்டிருக்கக் கருதுவதுபோல் தோற்றுகிறது. அவ்வாறு வேற்றுமைப்பாட்டுக்குக் காரணம் என்னவென்று தெரிந்துகொள்ள விரும்புகிறோம்' என்று தாத்பர்யம். இப்படிக் கேட்ட பிறகு தன் ஸௌஹார்த்தத்தையே இவர்கள் சங்கிப்பதுபோல் பாவிக்கிறார்கள். அதற்கு இடம் தரக்கூடாதென்று நினைத்துச் சதுரையான இப்பெண்மணி எல்லாரும் போந்தாரோ—எலலாரும் : வந்துவிட்டார்களோ? என்று பதில் சொல்லுகிறாள். 'எனக்கு உங்களைவிட்டுத் தனிப்படவேண்டு மென்கிற அபிப்ராயம் சிறிதும் கிடையாது. அவ்விதம் நீங்கள் சங்கித்தது ந்யாயமல்ல. ஒருவர் தவறாமல் நாமெல்லோரும் ஒருங்கு சேர்ந்து நீராடப் போகவேண்டு மென்பதில் உங்களைவிட எனக்குப் பதின்மடங்கு நோக்குளது. ஆகையால்தான் எல்லாத் தோழிமாரும் வந்து சேர்ந்தார்களா என்று உங்களைக் கேட்கிறேன்' என்றாள். அவர்களுடைய சங்கைக்குக் காரணமில்லை என்று ஸூசித்ததுடன், இந்த வ்யாஜத்தினால் கொஞ்சம் விளம்பம் ஏற்படட்டுமே யென்றும் தாத்பர்யம். இதற்கு அவர்கள் பதிலளிக்கிறார்கள். போந்தார் போந்து எண்ணிக்கோள் - எல்லாரும் வந்துவிட்டார்கள்; (எங்கள் வார்த்தையில் நம்பிக்கை யில்லாவிட்டால்) நீயே வந்து எண்ணிக்கொள். இதுவும் ஒரு சதுரமான ப்ரதிவசநமாகும். எண்ணிக்கொள்வதற்காக எழுந்திருந்தாலே தங்கள் இஷ்டஸித்திக்குப் போது மென்பது உட்கருத்து. இதற்கு மேல் அப்பெண்ணுக்குப் பதில் சொல்ல அவகாச மில்லாமற் போனது கண்டு, ப்ரதிபந்த நிவ்ருத்தி பூர்வகமாக இஷ்டப்ராப்தி கிடைக்கவேண்டிய க்ரமத்தை யொட்டித் தாங்கள் இவ்வளவு ப்ரயத்ந புரஸ்ஸரமாய் இவளைக் கூவுதலின் உத்தேசத்தை விவரிக்கிறார்கள் 'வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க வல்லானை மாயனைப் பாடு' என்று. 'நாங்கள் இவ்வளவு தூரம் பாடுபட்டு உன்னை அழைப்பதின் உத்தேசம், பரம போக்யமான நிரதிஶய புருஷார்த்தத்தில் உன்னை ஒரு பங்காளியாக்குவதற்கே யென்பதை நீ உணரவேண்டும்' என்று தாத்பர்யம்.

வல்லானை கொன்றானை - அதிபலிஷ்டமான குவாயாபீட மென்ற யானையைக் கொன்றவனும்; மாற்றாரை மாற்று அழிக்க வல்லானை - கம்ஸாதிகளான சத்துருக்களுடைய செருக்கை யழிக்கக்கூடிய பராக்ரமசாலியும் ; மாயனை பாடு - ஸர்வ ஜகந்மோஹநமான திவ்யரூபகுண சேஷ்டிதங்களால் எல்லோருக்கும் மநோ நயந ஹாரியாய் நிற்பவனுமான எம்பெருமானைத் துதிப்பதற்காகப் போவோம். கரும்பு தின்னக் கூலி கேட்பாருமுண்டோ? மறு பேச்சில்லாமல் எழுந்துவா.

எல் ஓர் எம் பாவாய் - முன்போல். உபக்ரமத்தில் ‘இளங்கிளியே’ என்று ஸம்போதித்ததால், உன்னுடைய மதுர த்வநி இல்லாவிட்டால் மாயனைப் பாடுவது பூர்த்தி யடையாதென்று ஸூசிதம். ‘வல்லானை’ இத்யாதி விஶேஷண த்வயத்தால் அத்ருஷ்யத்வமும், ‘மாயனை’ என்றதால் அபிகம்யத்வமும் சொன்னதாயிற்று. இம்மஹா புருஷனைப் பாட நம் போலியர்க்கு இன்று தருணம் வாய்த்திருப்பதைக் ‘காற்றுள்ள போதே தூற்றிக்கொள்’ என்றபடி விரைவாகக் கைக்கொள்ளாமல் ‘இன்ன முறங்குதியோ’ என்று விஸ்மயித்தபடி. இப்பாசுரத்தில் அமைந்துள்ள ப்ரஶ்ந ப்ரதிவசந க்ரமத்தைக் கணிசித்தால், ஸதாசார்யர்கள் தமது சிஷ்யர்களைத் திருத்தி ஆட்கொள்வதற்குப் படும்ப்ரயத்நம் த்வநிப்பதுபோல் தோன்றுகிறது. ‘க்வம் ஶேஹம்ஶே’ இத்யாதியான பராசர பட்டர் ஸ்ரீ ஸூக்திக்கு இது மாத்ருகை போலும்.

[தொடரும்]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

தாரண ஆடிமீ

1உ	ஞாயிற்றுக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி. சூந்ய திதி.
2உ	திங்கட்கிழமை	—	கடக க்ருஷ்ண த்ரயோதசி திதி.
3உ	செவ்வாய்க்கிழமை	—	,, சதுர்த்தசி திதி.
4உ	புதன்கிழமை	—	அமாவாஸ்யை திதி; ஸர்வ அமாவாஸ்யை.
5உ	வியாழக்கிழமை	—	ப்ரதமா திதி: ஸூர்ய க்ரஹணம்.*
6உ	வெள்ளிக்கிழமை	—	த்விதியை திதி.
7உ	சனிக்கிழமை	—	அதிதி.
9உ	திங்கட்கிழமை	—	திருவாடிப் பூரம்: ஸ்ரீ ஆண்டாள் திருநக்ஷத்ரம்.
16உ	திங்கட்கிழமை	—	ஸர்வ ஏகாதசி.
18உ	புதன்கிழமை	—	பதினெட்டாம் பெருக்கு.
20உ	வெள்ளிக்கிழமை	—	ரிக்-யஜுர் உபாகர்மங்கள்.
21உ	சனிக்கிழமை	—	காயத்ரீ ஜபம்.
22உ	ஞாயிற்றுக்கிழமை	—	த்விதீயை - த்ருதீயை திதி த்வயம்.
23உ	திங்கட்கிழமை	—	சதுர்த்தி திதி.
24உ	செவ்வாய்க்கிழமை	—	பஞ்சமி திதி.
25உ	புதன்கிழமை	—	ஷஷ்டி திதி.
27உ	வெள்ளிக்கிழமை	—	ஜந்மாஷ்டமி.
30உ	திங்கட்கிழமை	—	ஸர்வ ஏகாதசி; கடக க்ருஷ்ண ஏகாதஶி திதி.
31உ	செவ்வாய்க்கிழமை	—	கடக க்ருஷ்ண த்வாதசி திதி.

* ஸூர்ய க்ரஹணம் :— ஆடிமீ 5உ (20—7—44) வியாழக்கிழமை புநர்வஸூ நக்ஷத்ரம் கூடிய அமாவாஸ்யை திதியில் காலை வாயு (வடமேற்குத்) திக்கில் ஸ்பர்ஶம்; ஈஶாந்ய (வடகிழக்குத்) திக்கில் மோக்ஷம். க்ரஹண பரிமாணம் சற்றேறக் குறைய முக்காலே மாகாணி. க்ரஹணம் விட்ட பிறகு போஜநமும் ப்ரதமை ஶ்ராத்தமும் செய்யவேண்டும். அன்று ஸூர்யோதயம் (புது மணிப்படி) 6 மணி, 43 நிமி.

		ம.	நி.
ஸ்பர்ஶ காலம்	...	9	40
மத்ய காலம்	...	11	20
மோக்ஷ காலம்	...	1	21
ஆத்யந்த காலம்	...	3	11

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ தேசிக வைபவம்

[சிறுங்கட்டூர் ஸ்ரீ. உப. S. N. ஸ்ரீராமதேசிக சிரோமணி,
S. V. O. இன்ஸ்டிட்யூட், திருப்பதி]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 4, பக்கம் 118-ன் தொடர்ச்சி]

இதுவரை முதலாவதான ஆசார்ய கடாக்ஷ ரூபமான ஸம்பத்து தேசிக வள்ளலிடம் பொருந்தியிருப்பதைப்பற்றி விரிவாக எடுத்துரைத்தோம். இனி: இரண்டாவதான பகவத் கடாக்ஷ ரூபமான ஸம்பத்தை ஸ்வாமி தேசிகன் பெற்றிருக்கிறார் என்பதைப் பற்றிக் கூறுவோம்.

ஜீவனுக்கு ஸம்பவிக்கும் இப்பகவத் கடாக்ஷம் மூன்று வகைப்பட்டது. ஒன்று: முன் ஜந்மத்திலேயே ஸம்பவிக்கக் கூடியது; இரண்டாவது: "**जायमानं हि पुरुषं यं पश्येन्मधुसूदनः। सात्त्विकः स तु विज्ञेयः स वै मोक्षार्थचिन्तकः**" [பூலோகத்தில் ஜநிக்கும் காலத்தில் எந்த ஜீவனை ஸர்வேஸ்வரன் கடாக்ஷித்தருள்கின்றானோ, அவன் ஸத்வ குணம் பொருந்தியும் மோக்ஷ ஸாதநத்தைத் தேடுவதில் ஊக்கமுடையவனாகவுமிருப்பான்] என்னும்படி, ஜீவன் பூலோகத்தில் ஜநிக்கும் காலத்தில் ஏற்படக்கூடியது; மூன்றாவது: பூலோகத்தில் ஜநித்துச் சிறிது காலம் கழிந்த பிறகு ஏற்படக் கூடியது.

இவைகளுள் முதலாவதான பகவத் கடாக்ஷத்தை நம் ஸ்வாமி அடைந்திருக்கிறார் என்பதை இனிக் கூறுவோம்.

பரம பாகவதரான க்ருஷ்ணன் என்னும் ஒரு ப்ராஹ்மண ஸ்ரேஷ்டர் திருமலையில் தமது பார்யா புத்ரர்களுடன் சிறிது காலம் வஸித்து வந்தார். பிறகு அம்மஹான் திவ்யதேச யாத்ரை செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டு பார்யா புத்ராதிகளை அவ்விடமே விட்டுவிட்டு ஸஞ்சாரத்துக்குப் புறப்பட்டார். அம் மஹானுடைய பத்நியானவள் தனக்கு ரக்ஷகன் ஒருவனும் இராமையால் அலர்மேல்மங்கை யுறை மார்பனையே ரக்ஷகனாகக் கருதி, மிக்க வருத்தத்துடன் காலத்தைக் கழித்து வந்தாள். இப்படியிருக்க, சிறிது நாளைக்கெல்லாம் அந்த விப்ரரும் திவ்ய தேச யாத்ரையை முடித்துக்கொண்டு திருமலைக்கே வந்து சேர்ந்தார். திருவேங்கடமுடையானும் இவர்களுடைய துன்பத்தைக் கண்டு ஸஹிக்க மாட்டாமல் அவர்முன் தோன்றி, "நீ வ்யஸநப்படாதே; அடுத்த ஜந்மத்தில் வேதாந்த தேசிகன் என்னும் பிருதைப் பெற்று நீ எல்லோராலும் கொண்டாடப்படப் போகிறாய்" என்று சொல்லி மறைந்தார் என்று புராணக் கதை.

"**कृष्णाख्यविप्रवेदान्तदेशिकत्वप्रदाय च**" [க்ருஷ்ணனென்னும் விப்ரனுக்கு வேதாந்த தேசிக பதத்தை அளித்தவனையும் பொருட்டு] என்ற

வேங்கடேஸ்வர அஷ்டோத்தர ஸ்தோத்ரத்திலுள்ள ஸ்லோகமே இக் கதைக்கு ஸூசகமாகும். திருவேங்கடமுடையான் அநுக்ரஹித்தபடி வேதாந்த தேசிக பதத்தை அடுத்த ஜந்மத்தில் ஸ்வாமி தேசிகனே பெற்றபடியால், முன் ஜந்மத்திலும் நம் தேசிகமணியே க்ருஷ்ண னென்னும் ப்ராம்ஹணனாகத் திருமலையில் வஸித்து வந்தார் என்று தெரியவருகிறது. முற்பிறப்பில் ஸ்ரீநிவாஸனிடமிருந்து வேதாந்த தேசிக பதம் பெற்ற பெருமையைத் தாமே தம்மால் இயற்றப்பட்ட ஸ்ரீ தயாஸதகம் என்னும் ஸ்தோத்ரத்தில் "वेदान्तदेशिकपदे विनिवेश्य बालम्" என்னுமிடத்தில் ஸாதித்தருள்கிறார். நம் தேசிகமணி முன் ஜந்மத்திலேயே விசேஷமாகப் பகவத் கடாக்ஷம் பெற்றிருக்கிறார் என்பதில் இனியும் ஐய முண்டோ?

ஸ்ரீ காஞ்சீ க்ஷேத்ரத்தில் அநந்தாசார்யரும் தோதாரம்மனும் பஞ்ச கால பராயணர்களாய்ப் புத்ர ஸம்பத்தின்றி வஸித்துவரும் காலத்தில், திருவேங்கடமுடையான், உடையவர் முதலானவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட நம் விஸிஷ்டாத்வைத மதம் உலகில் சிறிதளவும் ஸங்குசிதமாகாமல் இருக்கத் திருவுள்ளம் பற்றித் தன்னுடைய கௌஸ்துபம் முதலிய ஆபரணங்களை உலகில் ஆழ்வாராசார்யர்களாக அவதரிப்பித்து, பரமத கண்டந பூர்வகம் ஸ்ரீ விஸிஷ்டாத்வைத மத ஸ்தாபநம் பண்ணிவைத்தாப்போல், "यस्य नादेन दैत्यानां बलहानिरजायत" என்று மஹிமை பெற்ற திருமணியாழ்வானைக் கொண்டு தன் மநோரதத்தை நிறைவேற்ற எண்ணமுடையவராய் ஒருநாள் ராத்ரி அநந்தாசார்யருடைய ஸ்வப்நத்தில் தோன்றி, "நீர் நம்மைத் தொழ வாரும்; உமக்கு ஸத்ஸந்தாந மளிக்கின்றோம்" என்று ஸாதித்தருளினார். உடனே எழுந்திருந்து அதிவிஸ்மிதராய் 'இதுவும் ஓர் ப்ரஸாத' மென்று உகந்து, அநந்தாசார்யர் தம்முடைய தர்ம பத்நீ ஸமேதராய், "वेङ्कटाद्रिसमं स्थानं ब्रह्माण्डे नास्ति किञ्चन" "पुण्यदेशो वेङ्कटाद्रेः तुल्यो नैव महीतले" "अतिप्रीतिर्महाविष्णोस्तत्र वेङ्कटभूधरे" என்கிற திருமலையில், "मायावी परमानन्दं त्यक्त्वा वैकुण्ठमुत्तमम्। स्वामिपुष्करणीतीरे रमया सह मोदते" என்று எழுந்தருளியிருக்கும் ஸர்வேஸ்வரனை ஸேவிக்கத் திருவுள்ளம் பற்றி, அவ்விதமே அங்குச் சென்று, அவனை ஆபாத சூடம் அநுபவித்துத் தம் இருப்பிடமே செல்ல, ஸ்ரிய:பதியான ஸர்வேஸ்வரன் அநந்தாசார்யருடைய ஸ்வப்நத்தில் குழந்தை வடிவமாய்த் தோன்றித் திருமணியாழ்வானை அநந்தாசார்யர் கையில் கொடுக்க, அவரும் அதைத் தம்முடைய பத்நியிடம் கொடுக்க, அதை வாங்கிக்கொண்ட அவ்வம்மையும் தயங்கி நிற்க, 'இதை விழுங்கும்' என்று ஸர்வேஸ்வரன் சொல்ல, அவளும் அப்படியே செய்தாள். ப்ராத: கால மானவுடன் இவ்விருவரும் இரவில் நடந்த ஸ்வப்ந வ்ருத்தாந்தங்களைப் பரஸ்பரம் சொல்லிக்கொண்டு பரம ப்ரீதர்களாய்க் காஞ்சீ நகரமே எழுந்தருளினார்கள். பிறகு, அஸ்மகரென்னும் ராஜர்ஷி, பராஸர பகவான் முதலிய மஹான்கள், பன்னிரண்டு வர்ஷ காலம் கர்ப்பவாஸம் பண்ணினாப்போல் தோதாரம்மனிடத்தில் நம் ஆசார்யன் லோக விலக்ஷணமாகப் பன்னிரண்டு

வர்ஷகாலம் கர்ப்பவாஸம் பண்ணி, விபவ வர்ஷம் புரட்டாசி மாதம் திருவோண நக்ஷத்ரம் கூடின சுப திநத்தில், அவதரித்தருளினர். திருவேங்கட முடையானுடைய ப்ரஸாதத்தால் அவனுடைய தீர்த்தவாரி திநத்தில் அவதரித்தபடியால் குமாரனுக்கு வேங்கடநாதன் என்னும் திருநாமம் சாத்தப்பட்டது. இப்படி ஸ்வாமி தேசிகனுடைய அவதார வ்ருத்தாந்தத்தை அறிந்தவர்களுக்கு நம் தேசிக வள்ளல் ஜாயமாந கடாக்ஷம் விசேஷமாகப் பெற்றிருப்பது நன்கு புலப்படும்.

கச்சிமா நகரில் ஸ்ரீ நிகமாந்த குரு தமக்கு ஆசார்யனை அப்புள்ளாரால் உபதேசிக்கப்பெற்ற கருட மந்த்ரத்தை ஸதா ஜபித்துக்கொண்டு சிறிதுகாலம் எழுந்தருளியிருந்து, பெரிய திருவடியை உவப்பிக்கத் திருவுள்ளம்பற்றி, திருவஹீந்த்ரபுர மென்னும் திவ்ய தேசத்திற்கு எழுந்தருளி, அங்குள்ள ஔஷதாத்ரியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய ஸந்நிதிக்கு ஸமீபத்திலிருக்கும் அஶ்வத்த வ்ருக்ஷத்தின்கீழ் உட்கார்ந்து கருடமந்த்ரத்தை ஆவ்ருத்தி செய்ய, அதனல் ப்ரீதரான பெரிய திருவடி நயினர் இவருக்கு ப்ரத்யக்ஷமாகத் தோன்றி ஹயக்ரீவ மந்த்ரத்தை உபதேசித்து ஒரு ஹயக்ரீவ பிம்பத்தையும் ப்ரஸாதித்தருளினர். அதைப் பெற்ற நம் ஆசார்யன் அந்த பிம்பத்தை ஆராதித்துக் கொண்டும் எப்பொழுதும் அந்த மந்த்ரத்தையே ஜபித்துக்கொண்டும் இருக்கும் போது, இதனல் ப்ரீதரான ஸ்ரீ ஹயக்ரீவன் இவரைக்கொண்டு வேதாந்த ப்ரவசநம் பண்ணிவைக்கத் திருவுள்ளம்பற்றி இவர் முன் தோன்றி, தன் முகத்திலிருந்து பெருகும் லாலாமயமான அம்ருதத்தைக் கொடுத்து, ஸகல வித்யைகளிலும் வல்லமை உண்டாகும்படியாகக் கடாக்ஷித்தருளினர். உடனே ஸ்வாமியும் முதலாவதாக ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரத்தையும், ஹயக்ரீவ மந்த்ரோபதேஷ்டவான பெரிய திருவடி நயினர் விஷயமாக ஸ்ரீகருட பஞ்சாசத்தையும் செய்தருளினர் என்றும் பெரியோர் சொல்வர். இதனல், ஜநித்த பிறகு நம் குரு விசேஷமாகப் பகவத் கடாக்ஷம் பெற்றிருக்கிறர் என்பது நன்கு தெரியவருகிறது. இப்படி ஹயக்ரீவ கடாக்ஷம் பெற்ற வரலாறு "तुरगवदनतेजोबृंहिताश्चर्यशक्तिः" என்னுமிடத்தில் அநுஸந்திக்கப்படுகிறது.

தவிர: ஒரு ஸமயம் ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தில் மதாந்தரஸ்தர் ஒருவர் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை அடியோடு தூஷிக்க, இப்படி விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தம் பிறரால் கலங்கிக் கிடப்பதைக் கண்ட அங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் கூடி, 'ஶத்ருக்களை வென்று நம் தர்சநத்தை ஸ்தாபிக்க வல்லமையுடைய மஹான் யார்?' என்று விசாரிக்கும் காலத்தில், 'தேசிகன் என்னும் மஹாந் ஒருவர் காஞ்சீ க்ஷேத்ரத்தில் ஸகல ஶாஸ்த்ர பாரங்கதராய் எழுந்தருளியிருக்கிறர்' என்று அறிந்து அவருக்குப் பத்ரம் அனுப்ப, அதைக் கண்ட நம் ஸ்வாமியும், 'இது ஸ்ரீரங்கநாதன் ஆஜ்ஞை' என்று அதைச் சிரஸா வஹித்து அவ்விதமே ஸ்ரீரங்கம் எழுந்தருள, இவர் மிகவும் ஆகாரத்தில் ஹ்ருஸ்வராயிருப்பதால், "आकारो ह्रस्वः कीर्तिः महती" என்று எதிரிகள் பரிஹஸிக்க, இவரும் அவ்வாக்யத்தையே ஆதாரமாகக் கொண்டு பல நாள் அவர்களோடு வாதம் செய்து அவர்களை ஜயித்து, அவ்வாதங்களை அப்படியே பத்ராரூடமாகச் செய்ய, அதுவே ஶததூஷணீ என்னும் க்ரந்தமாக ஆயிற்று. இவ்வர்த்தத்தையே 'பேச்சொன்றுக்குச் சத

தாஷணியைப் பேசிய தேசிகனாள்’ என்று தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் இன்றைக்கும் அநுஸந்தித்து வருகிறார்கள்.

இப்படி ஸ்ரீ நிகமாந்த குரு எதிரிகளை வாதத்தில் ஜயித்துக் கொண்டு கோயிலிலே எழுந்தருளியிருக்கும் தருணத்தில், வடதேசத்திலிருந்து கவுடமிஸ்ரர்கள் கோயிலுக்கு வந்து திவ்ய ப்ரபந்த விஷயமாகவும் ஆழ்வார் ஆசார்யர்கள் விஷயமாகவும் வாதம்செய்ய, அவர்களை ஒரு நொடியில் ஸ்வாமி தேசிகன் நிரஸநம் செய்தருளினார்.

இதைப் பரம்பரையாகக் கேட்ட கிருஷ்ண மிஸ்ரர் என்னும் மதாந்தர வித்வான் இவருடன் வாதத்திற்கு வர, அவரையும் ஒரு நொடியில் நிரஸிக்க, அவரும் தம்மால் செய்யப்பட்ட ப்ரபோத சந்த்ரோதயம் என்னும் நாடகத்தை இவருடைய அங்கீகாரத்திற்காகக் காண்பிக்க, அதே க்ஷணத்தில் நம் ஆசார்யன் அதற்கு எதிராக ஸங்கல்ப ஸூர்யோதயம் என்னும் நாடக ரத்நத்தைச் செய்தருளினார்.

இதைக் கேட்ட டிண்டிம கவிஸார்வபௌமர் என்பார் ஒருவர் இவருடன் வாதத்திற்கு வர, அவரையும் அரை நொடியில் நம் ஆசார்ய ரத்நம் நிரஸிக்க, உடனே அக்கவி தான்செய்த ராகவாப்யுதயம் என்னும் காவ்யத்தை இவருடைய அங்கீகாரத்திற்காக இவரிடம் காண்பிக்க, அதே நொடியில் ஸ்ரீ தூப்புல் அம்மானும் அதற்கு எதிராக யாதவாப்யுதயம் என்னும் காவ்யத்தைச் செய்தருளினார். இவ்வாறு தூப்புல் பிள்ளை மதாந்தஸ்தர்களை ஜயித்து நம் தர்சநத்தை நிலைநாட்டிக்கொண்டு கோயிலிலே எழுந்தருளியிருப்பதைக் கண்டு, ஸ்ரிய:பதியான ஸ்ரீ ரங்கநாதன் இவரிடம் அதிப்ரீதராய் இவருக்கு ஸ்ரீ வேதாந்த தேசிகன் என்னும் பிருதத்தைத் தந்தருளினார் என்று நம் ஆசார்யர்கள் சொல்வார்கள். நம் ஆசார்யனிடம் மூன்றாவது பகவத் கடாக்ஷமாகிற ஸம்பத்து இருப்பதற்கு இதுவும் ஒரு நிதர்சநமாகும்.

இவ்வாறு ஸ்ரீ ரங்கநாதன் தனக்கு வேதாந்த தேசிக பிருதம் தந்தருளினதை நம் தேசிக மணியே, “स्वकमिति हरिदन्तं यामुनस्तोत्रकृत्या विवृणुत ; निगमान्ताचार्यकं वेङ्कटेशः “विश्वस्मिन् नामरूपाण्यनुविहितवता तेन देवेन दत्तां वेदान्ताचार्यसंज्ञामवहितबहुवित् सार्थमन्वर्थयामि” “श्रीरङ्गराजदिव्याज्ञालब्धवेदान्ताचार्यपदः” என்னுமிடங்களில் பரக்கப் பேசியிருக்கிறார்.

இனி, மூன்றாவதான பெரிய பிராட்டியாருடைய கடாக்ஷமாகிற ஸம்பத்தைப் பற்றிச் சற்றுப் பேசுவோம்.

திருவஹீந்த்ரபுரமென்னும் திவ்ய க்ஷேத்ரத்தில் நம் ஆசார்யன் அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்துகொண்டிருக்கும் காலத்தில், ப்ரதிவாதிகளால் ஏவப்பட்டு மஹா ஸமர்த்தனான ஒரு கொற்றன் இவருடைய திருமாளிகை வாசலில் வந்து, “நீர் எல்லாக் கலைகளிலும் வல்லவரென்று சொல்லுகிறீரே ; என்னைப்போல் ஒரு கிணறு கட்டும் பார்ப்போம்” என்று உத்கோஷிக்க, நம் ஸ்வாமியும் அவனைக் கர்வபங்கம் செய்யத் திருவுள்ளம்பற்றி, முதலில் கொற்றனைக் கிணறு கட்டச்சொல்லிக் கற்களைத் தாமே எடுத்துக் கொடுக்க, அப்படியே கொற்றனால் கட்டப்பட்ட கிணறு கோணலாக முடிந்தது. பிறகு கொற்றனால் கொடுக்கப்பட்ட கற்களைக் கொண்டு நம் ஆசார்யன் கட்டின கிணறு நேராக முடிய, அக்கொற்றனும் இவரிடம் அபசார க்ஷாபணம் செய்துகொண்டு போனான். நம் ஆசார்யனால் கட்டப்பட்ட கிணற்றை இன்னும் அங்குக் காணலாம். [தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

(1)

இவ்வர்ஷத்திய சந்த்ர க்ரஹணம்

ஸகல கர்மாநுஷ்டானங்களுக்கும் முக்ய ஆதாரமாகிய ஜ்யோதிஸ் சாஸ்த்ர மானது ஸ்ருதிக்கு அங்கமாயிருப்பதையும், இது தெரிந்தால்தான் வேதோக்த க்ரியைகள் யாவும் சரிவர நடைபெறு மென்பதையும் ஸகல வைதிகர்களும் ஒப்புக் கொள்ளவேண்டும். இந்த ஜ்யோதிஸ் சாஸ்த்ரம் மற்றை சாஸ்த்ரங்கள்போல் அப்ரத்யக்ஷமன்று. இது 'ப்ரத்யக்ஷம் ஜ்யோதிஷம் சாஸ்த்ரம் சந்த்ரார்கௌ யத்ர ஸாக்ஷிணௌ' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. க்ரஹணாதிகளால் ஸூர்ய சந்த்ரர்கள் சாஸ்த்ர ஸாக்ஷிக ளாகிறார்கள். இந்த ஜ்யோதிஸ் சாஸ்த்ரத்திற்கு, நிகழும் தாரண வர்ஷத்தில் ஒரு சோதனை ஏற்படுகின்றது. எப்படியென்றால்:—'வாக்ய கணிதம்' என்று பெயர்பெற்ற சில பஞ்சாங்கங்களில் தாரணஸூ மார்கழிமீ 15உ (29—12—1944) வெள்ளிக்கிழமை பூர்ணிமையன்று சந்த்ர க்ரஹண முண்டென்றும், மற்றும் சில பஞ்சாங்கங்களில் இல்லை யென்றும் வெளியிடப்பட் டிருக்கின்றது. சற்றேறக்குறைய 60 வர்ஷ காலமாக ஸ்ரீரங்கம் வரருசி வாக்ய பஞ்சாங்கம் உலவி வருகின்றது. இதில் க்ரஹண மில்லை யென்றும், இதற்கு வெகுகாலம் முன்னதாகவே உலவி வரும் மனோன்மணி முதலிய 28-ம் நம்பர் பஞ்சாங்கத்தில் க்ரஹணம் உண்டென்றும் ப்ரசுரிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் மருத்துவக்குடி இருவிதப் பஞ்சாங்களுள் ஒன்றில் உண்டென்றும், மற்றொன்றில் இல்லை யென்றும் ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். ஸ்ரீரங்கம் பஞ்சாங்கம், மருத்துவக்குடி இருவிதப் பஞ்சாங்கங்கள், ஆக இம் மூன்றிலும், திதி முதலியவைகளிலும் க்ரஹங்களின் சாரங்களிலும் கால நிர்ணயம் சற்றும் வ்யத்யாஸ மிராமலிருக்க, இந்த க்ரஹண விஷயத்தில் மாத்ரம் அவை பேதிக்கின்றன வென்பது ஆஸ்சர்யமே. இப்படி சாஸ்த்ரஜ்ஞர்களுள் நிர்ணய பேதம் ஏற்பட்டால் ஸாமாந்ய ஜநங்கள் என்ன செய்வார்கள்? க்ரஹணம் உண்டானால் அன்று ஸ்ராத்தத்தை விடவேண்டும்; இல்லை யென்றால் ஸ்ராத்தத்தைச் செய்ய வேண்டும். விடக்கூடாத ஸ்ராத்தத்தை விடுவதும் விடவேண்டியதை அநுஷ்டிப்பதும் தோஷமாயிற்றே. இந்தத் தர்ம ஸங்கடத்தில் என்ன செய்யலாம் என்பதற்கு ஸ்ரீ ஸந்நிதி நியமநம் ஆகவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன். ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா வாயிலாக நிர்ணயத்தை வெளிப்படுத்தலாம். வருஷம் பிறந்து மூன்று மாஸங்கள் சென்றுவிட்டன. ஒருவரும் இதைப்பற்றி ஆலோசித்திருப்பதாகத் தெரியவில்லை. ஆசார்ய பீடத்தை அதிஷ்டாநம் செய்துவரும் மஹாங்க ளெல்லாரும் இதில் கொஞ்சம் ஸ்ரத்தையை எடுத்துக்கொண்டு ஸீக்ரத்திலேயே ஒரு நிர்ணயத்தை வெளிப்படுத்துவார்களென்று நம்புகிறேன்.

22—6—44. **தி. க. திருமலை தாதாசார்யர், இளநகர்.**

(2)

பெருமாள் கோவிலில் ஸ்ரீ ஆதிவண் சடகோப மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்

'முத்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சி' என்றும், 'காசி முதலாகிய நன்னகரி யெல்லாம் கார்மேனி யருளாளர் கச்சிக் கொவ்வா' என்றும் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனால் கொண்டாடப்பட்டதும், 'கோயில் திருமலை பெருமாள் கோயில்' என்று சிறப்பித்துக் கூறப்படும் ஸ்தலங்களுள் ஒன்றானதுமான பெருமாள் கோயில் க்ஷேத்ரத்தில், ஸ்ரீ தேவப்பெருமாளுடைய ப்ரம்ஹோத்ஸவத்தில், ஐந்தாம் உத்ஸவ தினத்தன்று (7—6—44) ஸ்ரீமதாதி வண்சடகோப மஹா தேசிகனுடைய (வைசாக)மாஸ திருநக்ஷத்ர மஹோத்ஸவம் வழக்கம்போல் வெகு விபவத்துடன் நடந்தேறியது. அன்று ஸ்ரீ தேவப் பெருமாளுடைய மாலைப் புறப்பாட்டுக்கு முந்தி நாலு மணி சுமாருக்கு, ஸ்ரீ மஹா தேசிகன், மடத்தினின்றும் அத்யாபக வேதபாராயண கோஷ்டிகளுடனும் ஸ்ரீ தேவப்பெருமாள் அருளிய சத்ர சாமர வாத்ய கோஷங்களுடனும் ஸந்நிதி வீதியில் கோபுர த்வார பர்யந்தம் வீதி ப்ரமணமாக எழுந்தருளிப் பெருமாளை மங்களாசாஸநம் செய்தருளினர். திரும்பி மடத்துக்கு எழுந்தருளினதும்,

க்ரமமாக அத்யாபக வேத பாராயணச் சாத்துகள் முடிந்து உள்ளே எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ ஸ்வாமியின் திருவோலக்கத்தில் ஸ்ரீ மடத்து ப்ரபந்தம் உட்பட உசிதமாக ஸேவை பண்ணப்பட்டது. ஸ்ரீ தேவப்பெருமாள் கங்கைகொண்டான் மண்டபம் எழுந்தருளினதும், சாத்துமறை தொடக்கமாகி, முறையே 40, 41-ம் பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கர்களுக்கு மரியாதையாகித் தீர்த்த வினியோகங்கள் பண்ணப்பட்டு ராத்ரி 9-மணிக்கு உத்ஸவம் வெகு விமர்சையாக முடிவடைந்தது.

சைதாப்பேட்டை
10—6—44. } ஒரகடம். கோ. ஸுதர்சநாசார்யன்.

---

(3)

ஸர்வ வ்யாக்யாநாதிகரண சங்கா பரிஹாரம்

[வித்வான் ஸ்ரீ. உப. ப. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசார்யர், அட்வோகேட், தேவனூர் விளாகம்.]

ஸ்ரீ ஶ்ருத ப்ரகாசிகையில் ப்ரக்ருத ஸூத்ரத்திற்கு விஷயம் ‘பரமபுருஷா ஸாதாரண தர்மம் ஒன்றும் ஶ்ருதமில்லாததான பூர்வாநுதாஹ்ருத ஜகத்காரண வாதி வாக்யங்களே’ என்று சொல்லி யிருக்கிறது. ஸ்ரீ அதிகரண ஸாராவளியில் அம்மாதிரி வாக்ய ப்ரதர்சநார்த்தமாக ‘हिरण्यगर्भः’ ‘यदा तमः’ இத்யாதி இரண்டு வாக்யங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. தேவதா விசேஷ நிர்ணயமும் ஏற்படவேண்டி யிருப்பதால், தேவதாந்தர சங்காவஹமா யிருக்கும் சில வாக்யங்களை ப்ரதர்சநார்த்தமாக எடுத்தருளினர்.

அதிகாசங்கையின் ரீதி ஶ்ருத ப்ரகாசிகையில் சொல்லியிருக்கிறபடியே. பரம புருஷாஸாதாரண தர்மம் ஶ்ருத மில்லாதபடியால், யதா ப்ரதிபந்ந வஸ்துவையே அப்யுபகமம் செய்யலா மென்பதுதான் பரிஹாரமும். “ईक्षणविशेषादिर्मान्तराश्रवणेऽपि जगत्कारणत्वस्य ईक्षणविशेषादिवत् परमपुरुषासाधारणस्य द्वात्रिंशदधिकरणन्यायनिर्णीतत्वात् जगत्कारणत्वमेव चिदचिद्विलक्षण सर्वविधकारणभूत परब्रह्मशब्दवाच्य देवता विशेष परत्व साधकमित्यधिकानुयायि परिहारः” என்று ஶ்ருத ப்ரகாசிகையில் சொல்லி யிருக்கிறபடிதான் ஸ்வாமி தேசிகனுக்கும் அபிமதம். வேறுவிதமான அதிகாசங்கையையும் அதன் பரிஹாரத்தையும் அதிகரண ஸாராவளியில் ஸாதிக்கவில்லை. இப்படி அதிகாசங்கையை உத்பாவநம் செய்து அதி தேசத்தினால் பரிஹரிப்பதற்குக் காரணம் ஸூத்ரகாரரின் குண விசேஷ மென்பதை ‘शिष्य शिक्षैकचित्तः’ என்பதனால் காட்டி யருளினர்.

சதுர்முகாதிகளுக்கு ஈக்ஷதி கர்மாதிகரணாதிகளில் காரணத்வம் நிரஸிக்கப்பட்டிருந்ததை உபமர்த்தித்து, அதே வாக்யங்களில் சங்கை இந்த அதிகரணத்தில் கிளம்பவில்லை. அஸாதாரண தர்மம் ஶ்ருதமில்லாத வாக்யங்களே இந்த அதிகரணத்திற்கு விஷயம். ஶ்ருதப்ரகாசிகையில் அநுகத ரூபமாகக் குறிக்கப்பட்டதையே சில வாக்ய விசேஷங்களை உதாஹரித்து அதிகரண ஸாராவளியில் ஸங்க்ரஹித்தருளினர். வேறுவிதமான நிர்வாஹத்தைத் திருவுள்ளம் பற்றவில்லை யென்பதை ஸங்க்ரஹமாக விஜ்ஞாபித்துக் கொண்டேன்.

[‘பரமபுருஷாஸாதாரண தர்மம் ஒன்றும் ஶ்ருத மில்லாததான வாக்யங்களே ப்ரக்ருத ஸூத்ரத்திற்கு விஷயங்கள்’ என்பது ஸ்ரீ ஶ்ருத ப்ரகாஶிகாசார்யருடைய திருவுள்ளம் என்பதை ஒத்துக்கொண்டு இந்த ஸ்வாமி, அதிகரணஸாராவளியில் எடுக்கப்பட்டிருக்கும் வாக்யங்கள் அம்மாதிரியான வாக்யங்களே என்று எப்படி ஸாதிக்கிறார் என்பது விளங்கவில்லை. “हिरण्यगर्भस्समवर्तताग्रे भूतस्य जातः पतिरेक आसीत्” என்னும் வாக்யத்திலேயே பரமபுருஷாஸாதாரணமான நிருபாதிக பூதபதித்வ தர்மம் ஶ்ருதமாக இருக்கின்றதே. அம்மாதிரியே “न सन्न चासच्छिव एव केवलः” என்னும் வாக்யம் காணப்படும் ஶ்வேதாஶ்வதரோபநிஷத்திலும் பரமபுருஷாஸாதாரண தர்மங்கள் ஏராளமாக ஶ்ருதங்களாக இருக்கின்றன. இந்த லிங்கங்களின் பலத்தைக் கொண்டே, இம்மாதிரியான வாக்யங்களுக்குப் பகவத் பரத்வத்தை ஸ்ரீ ஶ்ருத ப்ரகாஶிகாசார்யர் ஸர்வ வ்யாக்யாநாதிகரண ப்ரகாஶிகையில் ஸ்தாபித்திருக்கிறார். பரமபுருஷாஸாதாரண தர்மம் ஶ்ருதமாக இராவிட்டால், காரணத்வ ஶ்ரவணத்தைக் கொண்டே பகவத் பரத்வத்தை நிர்ணயித்திருக்கலாமன்றோ? ஸ்ரீ. ந்ரு. ப். ஸம்பாதகர்.]

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

" योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥ "

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

சென்ற ஸஞ்சிகையில் ஸ்ரீ அழகிய சிங்கர் பவானியில் எழுந்தருளியிருந்ததாக விண்ணப்பித்துக் கொண்டிருந்தோம்.

ஸ்ரீ அழகிய சிங்கரின் ஜைத்ர யாத்ரை

அவ்விடத்திலிருந்த ஆஸ்திக ஶிரோமணிகளால் பக்தி ஶ்ரத்தையுடன் த்ருப்திகரமாக ஆராதிக்கப் பெற்று, ஸ்ரீ அழகியசிங்கர் அங்கிருந்து மார்க்கத்தில் அநேக ஸ்தலங்களை அலங்கரித்துக்கொண்டு கோயம்புத்தூர் நகரத்திற்கு நிகழும் ஆனி மீ ஆரம்பத்தில் எழுந்தருளினர். அவ்விடத்திலுள்ள பாகவதோத்தமர்களால் பூர்வமே ஸம்விதாநம் செய்யப்பட்டிருந்த ஸ்ரீ. உப. ஸி. வி. வேங்கடரமண ஐயங்கார் பங்களாவில் சற்றேறக்குறைய ஒரு வாரம் எழுந்தருளியிருந்து, பஹுகாலமாக 'कदा कदा' வென்று சாதகபக்ஷிபோல் எதிர்பார்த்திருந்த ஆஶ்ரிதர்களெல்லாருக்கும் காங்க்ஷாதிகமாக அநுக்ரஹங்களை வர்ஷித்து வந்தாரென்று நாம் அறிகின்றோம். ஸ்ரீ அழகிய சிங்கர் அவ்விடம் எழுந்தருளினதையும், அங்யாத்ருஶமான மஹோத்ஸவங்களை ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் கண்டருளினதையும், ஸ்ரீ வேங்கடரமண ஐயங்கார் ஸ்வாமி நேரில் கண்டநுபவிக்காமல் இந்த விபூதியை விட்டு மறைந்துவிட நேர்ந்ததே என்பதுதான் நமக்குப் பெரியதொரு குறைவாக இருக்கின்றது. அவர் எழுந்தருளியிருந்தால், அவருடைய ஆநந்தம், இப்பொழுது இதர ஆஶ்ரிதர்களெல்லாரும் அநுபவித்த ஆநந்தத்தினும் பன்மடங்கு அதிகமாக இருந்திருக்குமென்பது எமது துணிபு. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனிடம் அவருக்கு இருந்த பக்தி அளவற்றது. தமது பங்களாவில் ஸ்ரீ ந்ருஸிம்ஹனை எழுந்தருளப்பண்ணி நேரில் கைங்கர்யம் செய்யும்படியான பாக்யம் அவருக்கு இராமல் போய்விட்டதே என்றுதான் நாம் ஶோகிக்கிறோம். ஆனால், நித்ய விபூதியில் பூயிஷ்டமான நம உக்தியைச் சொல்லிக்கொண்டு நிரவதிகமான ஆநந்தத்தை அநுபவித்து

வரும் அவருக்கு, இந்த நஷ்டம் பெரியதொரு நஷ்டமாகமாட்டாது. என் செய்யலாம்? ஶரண்யனுடைய ஸங்கல்பத்துக்கு மாறாக நமது சிந்தனம் யாது பயன்படும்?

கோயம்புத்தூரில் ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளியிருந்த தினங்களில் ஆராதனம் முதலியவை ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய விபூதிக்கு அநுகுணமாகவே எல்லாரும் ஆனந்திக்கும்படி நடைபெற்றனவென்று நாம் அறிகிறோம். ஸ்ரீ வேங்கடரமண ஐயங்காருடைய குமாரராகிய ஸ்ரீ பாஷ்யம் ஐயங்காரும் தமது பிதாவைப் போன்றே அளவற்ற பக்தியுடனும் ஶ்ரத்தையுடனும் இந்தக் கைங்கர்யத்தில் அந்வயித்து அதனைச் சிறப்புற நடத்திவைத்தார் என்பதைக் கேட்க நாம் ஸந்தோஷமடைகின்றோம். தனத்துக்கு ஸாத்குண்யம் இம்மாதிரியான விநியோகங்களினாலன்றோ ஏற்படவேண்டும்? கோயம்புத்தூரை விட்டுப் புறப்பட்டு இன்னும் வ்யவஹிததரமான ஸ்தலங்களுக்கு ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளும்படியாக இருக்கின்றது. ஜகதாசார்யராக இருக்கும் மஹானுக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பே. அச் சிறப்புடன் அவர் ப்ரகாஶிப்பதை "पश्येम शरदश्शतम्" என்று பஹுகாலம் பார்த்து நமது மனம் களிக்கவேண்டும் என்பதே நமது ஹார்த்தமான ப்ரார்த்தனை. நாளை சாதுர் மாஸ்ய ஸங்கல்பம் **சிங்கநல்லூரில்** நடைபெறுகின்றதாம்.

* * *

க்ருதி பஞ்சகம்

முடும்பி ஸ்ரீ. உப. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியின் '**க்ருதி பஞ்சகம்**' என்னும் க்ரந்தத்தை நாம் வரப்பெற்றோம். அதன் நாமதேயத்திலிருந்தே அது ஐந்து க்ரந்தங்களுடைய ஸங்காதம் என்பது விளங்கும். ஐந்தும், தக்ஷிண சம்பகாரண்ய க்ஷேத்ரமாகிய ராஜமன்னார் ஸந்நிதியில் அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ராஜகோபாலனையே விஷயமாக உடையவை. ஸ்ரீ ராஜகோபாலன் இந்த ஸம்வத்ஸரம் வார்ஷிக மஹோத்ஸவம் கண்டருளின காலத்தில், திருத்தேரில் வீதியிலேயே கொஞ்சகாலம் எழுந்தருளியிருக்கும்படி ஸம்பவித்துவிட்டது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அதைப் பற்றி இந்தக் கவி அநேக ஆஶ்சர்யகரங்களான உல்லேகங்களுடன் 54 ஶ்லோகங்களைப் பாடி ஓர் ஆனந்த விஶேஷத்தை அநுபவிக்கிறார். இது முதல் க்ரந்தம். இரண்டாவது: கொஞ்ச காலமாக ஸ்ரீ ராஜகோபாலனுடைய ஸந்நிதியில், அவனுடைய திருவடிகளை ஆஶ்ரயித்திருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுள், ஒரு குடும்பத்தில் ப்ராதாக்களுக்குள் ஏற்

படும் கலஹம்போல, ஸ்வல்ப மநஸ்தாபம் பரஸ்பரம் ஸம்பவித்து வந்தது. அந்தக் காரணத்தால், உத்ஸவ காலத்தில் திவ்ய ப்ரபந்த கோஷ்டி நின்றுவிட்டது. அதைக் குறித்து நிர்வேதப்பட்டு ஷி க்ரந்த கர்த்தா பத்து ஶ்லோகம் அநுக்ரஹித்திருக்கிறார்.

"अग्रे द्राविडवेदसूक्तिरसिका गोष्ठी व्यरंसीच्चिरात्
तत्रार्ति कतिचिद्व्रजन्ति कलहश्शाम्येत् कदा सा भवेत् ॥"

என்று அவர் தமது தாபத்தை வெளியிட்டிருப்பது நமது ஹ்ரு தயத்தையும் கலக்குகின்றது.

பிறகு, ஸ்ரீ ராஜகோபால ஸ்தவ மென்றும், ப்ரஹ்மோத்ஸவ வைபவ மென்றும், ஸௌக்ய ப்ரார்த்தந மென்றும் மூன்று க்ரந் தங்கள் அப்பஞ்சகத்தில் காணப்படுகின்றன. ஸ்ரீ க்ருஷ்ணமா சார்யர் ஒரு சிறந்த கவி. அவருடைய க்ருதிகளை ரஸிகர்க ளெல் லாரும் அநுபவிப்பார்கள் என்பது நிஶ்சயம்.

* * *

த்ரைவர்ணிக ஸ்த்ரீகளும் வித்யா ஸ்தாநங்களும்

த்ரைவர்ணிக ஸ்த்ரீகளை நாம் வித்யாப்யாஸ விஷயத்தில் ஶூத்ரர்களுக்கு ஸமாநமாக க்ரஹித்து, 'ஶூத்ரர்களுக்கு அஸ் ப்ருஷ்டவ்யங்களாகப் பகவானால் அருளிச் செய்யப்பட்ட பதினாலு வித்யா ஸ்தாநங்களி லும் ஸ்த்ரீகளுக்கும் அதிகாரமில்லை' என்று அவர்களுக்கு அக்ஷராப்யாஸமும் செய்விக் காமல் அவர்களைத் திரஸ்கரித்து வருகி றோமே! இது ஶாஸ்த்ரீயமா? என்பதைச் சற்று விசாரிப்போம். ப்ரமாணங்களைப் பராமர்ஶித்தால், அபஶூத்ராதிகரணத்தால், ஶூத்ரர்கள் போல ஸ்த்ரீகளும் வித்யையிலிருந்து ப்ஹிஷ் கரிக்கப்படுகிறார்கள் என்று ஒரு ஶங்கை ஜநிக்கக்கூடும். ஊன் றிப் பார்த்தால் அந்த ஶங்கைக்கு இடமில்லை என்பது விளங்கும். தேவதாதிகரணம் மத்வதிகரணம் இந்த இரண்டு அதிகரணங் களால், ஸகல தேவதைகளுக்கும் ஸகல ப்ரஹ்ம வித்யைகளிலும் அதிகாரமுண்டு என்று ஸ்தாபித்த பிறகு, ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக ஶூத்ரர்களுக்கு ப்ரஹ்ம வித்யையில் அதிகார முண்டா இல்லையா என்பதை மாத்ரம் விசாரிக்க ஸூத்ரகாரர் இவ்விடத்தில் ப்ரவர்த் திக்கிறாரே தவிர்த்து ஸ்த்ரீகளைப் பற்றிய விசாரத்தைச் செய் யப்போவதாக நினைக்க ஒரு அடையாளமும் இல்லை. "**ब्रह्मविद्यायां शूद्रस्याप्यधिकारोऽस्ति न वेति विचार्यते**" என்பது அவ்விடத்தில் தென் படும் ஸ்ரீ பாஷ்ய அவதாரிகை. இவ்விடத்தில் "**शूद्रस्य**" என்று ஶூத்ரர்கள் மாத்ரம் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கிறார்களே யொழிய

ஸ்த்ரீகளுடைய ப்ரஸ்தாவமே இல்லை. ஆனால், அந்த அதிகரணத்தின் உத்தரபாகத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ந்யாயங்களை ஸ்த்ரீகளுக்கு அதிதேஶம் செய்யலாமோ வென்று பார்த்தால், அப்படி அதிதேஶம் செய்யவும் இடமில்லை என்பது தெரியவரும். அந்த ந்யாயங்களுள் முதலாவது ந்யாயம் "संस्कारपरामर्शात्तदभावाभिलापाच्च" என்பது. அதன் பொருளாவது: 'ப்ரஹ்ம வித்யையை உபதேஶிக்கும்பொழுது உபநயந ஸம்ஸ்காரம் பராமர்ஶிக்கப்படுகின்றது. அந்த ஸம்ஸ்காரம் ஶூத்ரர்களுக்கு இல்லையாதலால்' என்பதுதான். ஸ்த்ரீகள் விஷயத்தில் விவாஹத்தையே ஸ்ம்ருதி கர்த்தாக்கள் உபநயநமாகச் சொல்லியிருக்கிறபடியால் அவர்களுக்கு இந்த ஹேது அந்வயிக்க ப்ரஸக்தியில்லை.

"एष वैवाहिकस्त्रीणामौपनायनिको मतः"

[இந்த விவாஹ ஸம்ஸ்காரமே ஸ்த்ரீகளுக்கு உபநயந ஸம்ஸ்காரமாகும்] என்பது மநு வாக்யம். விவாஹம் முதற்கொண்டு ஸ்த்ரீகளுக்கு, உபநீத புமான்களுக்குப் போல, ஶாஸ்த்ரம் ஆஶௌசத்தை விதிக்கின்றது. உபநீத புமான்கள் போல ஸ்த்ரீகளும் அந்த ஆஶௌசத்தை அநுஷ்டித்து வருகிறார்கள். ஆகையால் விவாஹித த்ரைவர்ணிக ஸ்த்ரீகள் உபநீதர்களே; த்விஜாதிகளே. 'श्रवणाध्ययनार्थप्रतिषेधात्' என்பது இரண்டாவது ஹேது. 'ஶூத்ரர்களுக்குக் காது கேட்கும்படி வேதாத்யயநம் செய்யக்கூடாது என்று நிஷேதம் இருப்பதால்' என்பது அதன்பொருள். இந்த நிஷேதம் ஸ்த்ரீகள் விஷயத்தில் காணப்படவில்லை. "अथ हाऽस्य वेदमुपशृण्वतस्त्रपुजतुभ्यां श्रोत्रप्रतिपूरणम्" இத்யாதியான ப்ரமாணங்கள் ஶூத்ரர்களை மாத்ரம் விலக்குகின்றனவே ஒழிய, த்ரைவர்ணிக ஸ்த்ரீகளை அவை விலக்கவில்லை. அப்படி விலக்கும் வேறு அநந்யதாஸித்த ஶாஸ்த்ர மொன்றும் ஓரிடத்திலும் தென்படவுமில்லை; இது மாத்ரமன்று; ப்ரத்யுத, வைதிகோத்தமர்களான மஹான்களுடைய க்ருஹங்களிற்கூட ஸ்த்ரீகள் கேட்கும்படியாகவே மாணவர்கள் வேதாத்யயநம் செய்துவருவதை நாம் பார்க்கிறோம்.

"स्त्रीशूद्रद्विजबन्धूनां त्रयी न श्रुतिगोचरा"

[ஸ்த்ரீகள் ஶூத்ரர்கள் த்விஜ ஆபாஸர்கள் இவர்கள் விஷயத்தில் வேதம் ஶ்ரவணமாக மாட்டாது] என்று ஒரு புராண ப்ரமாண மிருக்கின்றது என்பது உண்மையே. ஆனால், இதில் சொல்லப்படும் ஶ்ரவண நிஷேதம் ஶூத்ரர்களை மாத்ரம் பற்றியதே. ஏனென்றால், வித்யாதிமாநக இருக்கும் த்விஜபந்து விஷயத்தில் இந்த நிஷேதம் எப்படி ஸங்கோசிக்கப்பட வேண்டுமோ,

அப்படியே ஸ்த்ரீகள் விஷயத்திலும் இதை ஸங்கோசித்துக் கொள்வதே உசிதமாகும். பாபயோநித்வ ப்ரயுக்தமான ஸமக்ராத்யயந நிஷேதமே இவ்விடத்தில் விவக்ஷிதமென்று கதி கல்பித்துவிட வேண்டும். மேலும் சிற்சில விஶேஷித்த காலங்களில் சிற்சில வேத வாக்ய உச்சாரணம் தர்ம ஶாஸ்த்ரங்களால் ஸ்த்ரீகளுக்கு விதிக்கப்பட்டு, அம்மாதிரி அவர்கள் உச்சரித்து வருவதையும் நாம் காண்கிறோம். ஆகையால் ஸ்த்ரீகளுக்கு வேத ஶ்ரவணம் அப்ரதிஷித்தமாயும் கிஞ்சித் வேதாத்யயநம் ப்ராப்தமாயும் ஸித்திக்கக் குறையில்லை. உபநிஷத்தில் காணப்படும் மைத்ரேயீ ப்ராஹ்மணம் கார்க்கீ ப்ராஹ்மணம் இதிஹாஸங்களிலும் புராணங்களிலுமுள்ள மஹர்ஷி ஸ்த்ரீகளின் வ்ருத்தாந்தங்களும் ப்ரஸ்துத விஷயத்திற்கு அநந்யதாஸித்த ப்ரமாணங்கள்.

"न स्त्रीशूद्रौ वेदमधीयाताम्"

[ஸ்த்ரீகளும் ஶூத்ரர்களும் வேதத்தை அத்யயநம் செய்யக் கூடாது] என்று ஶூத்ரர்களுக்குப் போல் ஸ்த்ரீகளுக்கும் ஸ்பஷ்டமாக ஒரு நிஷேத வாக்யத்தை நையாயிகர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த வாக்யத்தின் ப்ராமாணிகத்வம் ஸம்ஶய க்ரஸ்தம். இதற்கு ஆகரம் எது வென்று தெரியவில்லை; ப்ராமாணிக ஶிரோமணிகளான பாஷ்யகாரர்களும் அவஸரம் ப்ராப்தமான இடத்திலும் இந்த வாக்யத்தை ப்ரமாணமாக உதாஹரித்ததாகவும் தெரியவில்லை. ஆகையால் இது உபாதேயமான ப்ரமாணமாக மாட்டாது.

"मां हि पार्थ व्यपाश्रित्य येऽपि स्युः पापयोनयः ।
स्त्रियो वैश्यास्तथा शूद्रास्तेऽपि यान्ति परां गतिम् ॥"

[ஸ்த்ரீகள் வைஶ்யர்கள் ஶூத்ரர்கள் இவர்கள் பாப யோநிகளாக இருந்தாலும் என்னுடைய ஸமாஶ்ரயண மாத்ரத்தால் பல ஸித்தியை அடைவார்கள்] என்னும் பகவத் வாக்யத்தில் பர பஜநத்தில் அநதிக்ருதர்களான ஶூத்ரர்களுடன் வைஶ்யர்களும் ஸ்த்ரீகளும் சேர்த்துப் படிக்கப்பட்டிருக்கிறபடியால் 'ஶூத்ரர்கள் போல மற்றை இருவரும் பஜநத்திற்கு அதிகாரமற்றவர்கள்' என்பது பகவத் விவக்ஷிதமோ வென்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். அந்த ஶங்கை அஸங்கத மென்பது, வித்யாமானுகிற வைஶ்யனுடைய பரிகணநத்தால் விளங்கும். வைஶ்யன் த்ரைவர்ணிகனானதால் அவன் பஜநாநர்ஹ னென்று நினைப்பதற்கு இடமில்லை. மூன்று பெயர்களும் பாப யோநிகளானபடியால் மாத்ரம் அவர்கள் ஒன்று சேர்த்துப் படிக்கப்பட்டிருக்கிறார்கள். "ये पापयोनयोऽपि स्युः" [பாப யோநிகளாக இருந்த போதிலும்] என்று அந்வயிக்கவேண்டு மென்று தாத்பர்ய சந்த்ரிகையில் விவரிக்கப்பட்டிருக்கின்றது. 'பாப யோநிகளாக இருந்த போதிலும் பல ஸித்தியைப் பெறுகிறார்கள்' என்பதே தாத்பர்யம்;

'பஜநத்தில் அநதிக்ருதர்களாக இருந்தாலும் பல ஸித்தியைப் பெறுகிறார்கள்' என்பது அர்த்தமாக மாட்டாது. ஆகையால் உக்த ஶங்கைக்கு இடமில்லை.

தாடஸ்த்யத்துடன் இந்த விஷயத்தை விசாரித்துப் பார்க்கும் பொழுது வஸ்து ஸ்திதி கீழ்க்கூறப்படுமாறு இருப்பதாகவே விளங்குகின்றது. ஶூத்ரர்களுக்கு மாத்ரம் வித்யா ஸ்தாநங்களில் அதிகாரமில்லை என்பதே ஶாஸ்த்ர ஹ்ருதய மென்று சொல்ல வேண்டும். அந்த அநதிகாரமும் ப்ரதிஷேத பலத்தாலேயே ஸித்திக்கின்றது; அத்யயநம் இல்லாமை அதற்கு முக்ய காரணமாக மாட்டாது. த்ரைவர்ணிக ஸ்த்ரீகள் விஷயத்திலோ அப்படிப்பட்ட ப்ரதிஷேதமொன்றுமில்லை யாகையாலும் அவர்களுக்கு விவாஹமே உபநயநமாகிறபடியாலும் வேதாத்யயநத்திலோ ப்ரஹ்ம உபாஸநத்திலோ இன்னும் மற்றை வித்யாஸ்தாநங்களிலோ த்ரைவர்ணிகப் புமான்களுக்குப் போல இவர்களுக்கும் அதிகாரமுண்டு என்பதே ஶாஸ்த்ர ஹ்ருதய மென்று தோன்றுகிறது. இதற்குமேல் ஶாஸ்த்ரஜ்ஞர்களுடைய நிர்ணயமே ப்ரமாணம்.

* * *

ஸ்ரீமதுராந்தகம் ஶாஸ்த்ர பாடஶாலை

நிகழும் ஆனிமீ 27உ [10—7—44] திங்கட்கிழமை ஶுக்ல பஞ்சமி சதய நக்ஷத்ரம் கூடிய ஶுப திநத்தில், ஸ்ரீ ஸந்நிதி பாடஶாலையில் புதிய வர்ஷத்தின் ப்ரவசநம் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அநுக்ரஹத்தை முன்னிட்டு உபக்ரமிக்கப்படும். அப்பொழுது சென்ற வர்ஷத்தில் பாடஶாலையில் வித்யார்த்திகளாயிருந்து கடைசிப் பரீக்ஷையில் நிஷ்பத்தி அடைந்தவர்களெல்லாரும் மேல் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அன்று மத்யாஹ்நம் 3 மணிக்குப் புதிதாகப் பாடஶாலையில் சேர்வதற்காக மனுச் செய்துகொண்டிருக்கும் வித்யார்த்திகள் ப்ரவசந கர்த்தாக்களால் பரீக்ஷிக்கப்பட்டு, தம் தமக்கு உசிதமான வகுப்பில் வித்யார்த்திகளாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஶிரோமணி பாகத்தில் ந்யாய ஶாஸ்த்ரமும் வ்யாகரண ஶாஸ்த்ரமும் ப்ரவசநம் செய்யப்படும். இந்த வர்ஷம் ப்ரவேஶக பரீக்ஷையில் தேறினவர்கள் ஶிரோமணி முதல் பாகத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். பூர்வம் வேறு பாடஶாலைகளில் வித்யார்த்திகளாக இருந்து இப்பொழுது இந்தப் பாடஶாலையில் ப்ரவேஶத்தை அபேக்ஷிப்பவர்களெல்லாரும், தாம் பூர்வம் படித்த பாடஶாலையின் அதிகாரிகளிட மிருந்து ஒரு அநுமதி பத்ரம் வாங்கிக் கொண்டு வரவேண்டும். அந்தப் பத்ர மிராமல் வரும் மனுதாரர்களுக்குப் பரீக்ஷையில் ப்ரவேஶம் கிடைக்கமாட்டாது. பரீக்ஷை ஸ்ரீமதுராந்தகத்தில் பாடஶாலை ப்ரார்த்தநா மண்டபத்தில் நடைபெறும்.

"**संवत्सरो वै प्रजापतिस्तस्यायने दक्षिणञ्चोत्तरञ्च । तद्ये ह वै तदिष्टापूर्ते कृतमित्युपासते ते चान्द्रमसमेव लोकमभिजयन्ते त एव पुनरावर्तन्ते । तस्मादेत ऋषयः प्रजाकामा दक्षिणं प्रतिपद्यन्ते । एष ह वै रयिर्यः पितृयाणः ॥ ९ ॥**

அப்படிப்பட்ட பரம ப்ராப்யத்வம் பூதாகாசத்திற்கு அஸம்பாவிதமாகையால், அம்மாதிரியான இடங்களில் 'ஆகாஶ' ஶப்தத்தின் ப்ரஸித்தார்த்தத்தைப் பரித்யஜித்து, அவயவ ஶக்தியைக்கொண்டு அதற்குக் கிடைக்கும் பொருளை எடுத்துக்கொள்ளுகிறோம். 'ஆகாஶ' ஶப்தத்தின் அவயவார்த்தம், **आ-समन्तात्, काशते-प्रकाशते**, [ஸகல ப்ரதேஶத்திலும் ப்ரகாஶிக்கும் வஸ்து] என்பது. அப்படிப்பட்ட ப்ரகாஶம் பரம புருஷனுக்கே அஸாதாரணம்.

'இம்மாதிரி ஸந்தர்ப்பத்திற்குத் தக்கபடி ப்ரஸித்தார்த்தத்தை த்யஜித்து ஏதாவது ஒரு வ்யுத்பத்தியைச் செய்து அதன் பலத்தால் வேறொரு அர்த்தத்தை ஆரோபிப்பது ஒரு ந்யாயத்தின் கீழ் வருமா?' என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். வேதாந்த வாக்யங்களுக்கு இம்மாதிரி ஒரு மார்க்கத்தைக் கல்பிப்பது அவஶ்யமே. இந்த ஆவஶ்யகதையை உணர்ந்து ஸ்ரீ வ்யாஸ பகவானே இதற்கு ஒரு வ்யவஸ்தையை விளக்கியிருக்கிறார். அது என்னவென்றால்: ஒரு ஶப்தத்திற்குப் பரமாத்ம வாசகத்வத்தை இரண்டு விதமாக நிர்ணயிக்கலாம். பரம புருஷனுக்கு அஸாதாரணமாயுள்ள ஒரு குணத்தின் யோகத்தால் ஸாக்ஷாத்தாகவே அவயவ ஶக்தியைக்கொண்டு அந்த நிர்ணயத்தைச் செய்வது ஒரு ரீதி. [**साक्षादप्यविरोधं जैमिनिः**]. 'அக்நி' ஶப்தத்திற்கு 'அக்ரம் நயதி' என்னும் வ்யுத்பத்தியால் பர ப்ரஹ்ம வாசகத்வத்தை விளக்குவது இதற்கு உதாஹரணம். மற்றொன்று [**अवस्थितेरेव काशकृत्स्नः**] பரமாத்மா ஸமஸ்த ஜகத்திற்கும் அந்தராத்மாவாக இருப்பதால் அவன் ஸர்வ நிஷ்டனாகிறான். அந்தக் காரணத்தால் ஜீவவாசி ஶப்தங்களெல்லாம் பரம்பரையாகப் பரமாத்ம பரங்களாகக்கூடும் என்பதுதான். 'அப்ருதக் ஸித்த விஶேஷண வாசி ஶப்தங்களுக்கு விஶேஷ்ய பர்யந்தாபிதாந ஸாமர்த்யமுண்டு' என்னும் ந்யாயம் இதற்கு ஆதாரம். '**आत्मनस्तु कामाय पतिः प्रियो भवति**' இத்யாதியான இடங்களில் ஜீவவாசியான ஆத்ம ஶப்தத்திற்குப் பரப்ரஹ்ம பரத்வம் சொல்வது இதற்கு உதாஹரணம். இந்த இரண்டு ந்யாயங்களும் ஸ்ரீ வ்யாஸ பகவானால் விளக்கப்பட்டு நமது ஆசார்யர்களால் பரிக்ரஹிக்கப்பட்டிருக்கின்றன.

---

9. இந்த உபநிஷத்தில் தத்வங்கள் பரோக்ஷ ரூபங்களாகப் பேசப்படுகின்றன வென்பதை, ப்ரக்ருதியையும் புருஷனையும் 'ரயி' என்றும் 'ப்ராணன்' என்றும் சொல்லியிருக்கும் ப்ரக்ரியையால் நாம் பார்த்தோம். இப்பொழுது உபாஸகர்களுடைய ஸௌகர்யத்தை உத்தேசித்து

ப்ரஹ்மத்தை அகண்டகால ரூபமாகவும் கண்டகால ருபமாகவும் பிரித்துப் பேசுகிறார். அகண்ட கால ரூபமாவது:—ஸ்ருஷ்டிக்கு முன் ஸூக்ஷ்மமாயிருக்கும் ப்ரக்ருதியையும் புருஷனையும் தனது ஶரீரமாக உடைத்தாயிருக்கும் அவஸ்தை. அந்தப் பரப்ரஹ்மம், ஸ்ருஷ்டிக் கும்பொழுது ரயி ப்ராணன் என்னும் ஶப்தங்களால் பேசக்கூடிய போக்ய வஸ்துக்களாகவும் போக்த்ரு வஸ்துக்களாகவும் பிரிகின்றது. கண்ட கால ரூபமாவது:— வர்ஷம் மாஸம் திநம் இவை பரப்ரஹ்மத்தின் கண்ட கால ரூபங்களென்று பேசப்படுகின்றன. வர்ஷம் உத்தராயண தக்ஷிணாயநங்களாகப் பிரிவது போலவும், மாஸம் க்ருஷ்ண பக்ஷ ஶுக்ல பக்ஷங்களாகப் பிரிவது போலவும், திநம் பகலாகவும் இரவாகவும் பிரிவது போலவும் பரமாத்மாவும் பிரிகிறான் என்று சொல்லலாமன்றோ? இப்படி வர்ணிப்பதால் பகவானிடமிருந்து போக்த்ரு வர்க்கமும் போக்ய வர்க்கமும் பிரிகின்றன வென்பது விளக்கப்படுவதுடன், தக்ஷிணாயந க்ருஷ்ண பக்ஷ இரவுகளைக் காட்டிலும் உத்தராயணம் ஶுக்ல பக்ஷம் பகல் இவை எப்படி உத்க்ருஷ்டங்களோ, அப்படி 'ரயி' யாகப் பேசப்படும் ஜீவன் உத்க்ருஷ்டன் என்பதும் விளக்கப்பட்டதாகின்றது.

[ப - ரை.] **संवत्सरः** - வர்ஷமானது, **प्रजापतिः** - பரஹ்ம ரூபமே. **तस्य** - அதற்கு [ஸம்வத்ஸர மென்று சொல்லப்படும் காலத்தை ரூபமாக வுடைய அந்த ப்ரஹ்மத்திற்கு], **दक्षिणश्चोत्तरश्च** - தக்ஷிண மென்றும் உத்தர மென்றும், **अयने स्तः** - இரண்டு ரூபங்கள் [ஸூர்ய கதிக்கு ஆதாரமாயுள்ள இரண்டு ரூபங்கள்], [**स्तः** - இருக்கின்றன]. **ततः** அவ்விடத்தில், **ये** - எவர்கள், **इष्टापूर्ते** - இஷ்டமாகவும் பூர்த்தமாகவும் [யாகம் முதலிய ஶ்ரௌத கர்மங்களுக்கு இஷ்டமென்று பெயர்; குளம் கிணறு வெட்டுதல் முதலிய லௌகிக ஸத் கர்மங்களுக்குப் பூர்த்தி யென்று பெயர்.] **कृतम्** - கொடுக்கப்பட்டதாக, **इति** - இவ்வாறு, **उपासते** - உபாஸிக்கிறார்களோ [அதாவது:— எவர்கள் யாகம் தாநம் வாபீ கூபம் இவைகளைச் செய்கிறார்களோ], **ते** - அவர்கள் **चन्द्रमसं लोकमेव** - சந்த்ரனுடன் ஸம்பந்தம் பெற்றுள்ள லோகத்தையே **अभिजयन्ते** அடைகிறார்கள், [சந்த்ர லோகத்தை அடைவது பித்ரு யாணத்திற்கு அடையாளம்]. **ते** - அவர்கள் **पुनरावर्तन्त एव** - மறுபடியும் [ஸம்ஸாரத்திற்குத்] திரும்பி வருகிறார்கள். **तस्मात्**-ஆகையால், **एते प्रजाकामाः ऋषयः** - இந்த அல்ப பலத்தை அபேக்ஷிக்கும் ருஷிகள் [ஒரு கர்மத்தின் பலத்தின் ஸ்வரூபத்தை அறியுமவர்களை ருஷிகளென்று சொல்வார்கள். இவர்கள் க்ஷுத்ர பலத்தில் நோக்குள்ளவ ராயினும், பலத்தை உள்ளபடி பார்க்கிறபடியால் இவர்களும் ருஷிகளென்று வ்யவஹரிக்கப்படுகிறார்கள்], **दक्षिणं** - தக்ஷிண மார்க்கத்தை [இந்த மார்க்கம் 'பித்ரு யாணம்' என்றும் பேசப்படும்], **प्रतिपद्यन्ते** - அடைகிறார்கள். **एष पितृयाणः**—இந்தப் பித்ரு யாணமானது, **रयिः** - அந்

" अथोत्तरेण तपसा ब्रह्मचर्येण श्रद्धया विद्ययाऽऽत्मानमन्विष्यादित्यमभिजयन्ते, एतद्वै प्राणानामायतनमेतदमृतमभयमेतत्परायणमेतस्मान्न पुन-रावर्तन्त इत्येष निरोधः ॥ तदेष श्लोकः ॥ १० ॥

நத்தை ப்ரதாநமாக உடையது. [அதாவது: லௌகிக விஷய போகங்களால் நிறைந்தது. இந்த மார்க்கத்தால் வெளியேறுகிறவர்கள் திரும்பித் திரும்பி ஸம்ஸாரத்தை அடைந்து விஷய போகங்களையே அநுபவித்து உழலுவார்கள் என்பது தாத்பர்யம்.] '**ह वै** - என்பது ப்ரஸித்தியைச் சொல்லுகின்றது.

---

10. 'அல்பபலத்தை [ரயி என்னும் ஶப்தத்திற்கு வாச்யமானது அந்நம்; அது போக்ய வஸ்துக்களையும் குறிக்கும்] உத்தேஶித்து யாகம் தாநம் முதலியவைகளைச் செய்பவர்களின் கதியானது திரும்பத் திரும்ப ஸம்ஸாரத்தை அடைவதே' (பித்ருயாணமே) என்பதை விளக்கிவிட்டு, இனி, 'விஷய போகங்களிலிருந்து விரக்தர்களாய்ப் பரமாத்மாவையே உபாஸிக்கிறவர்கள் அம்மாதிரி பித்ருயாணம் வழியாகப் போகிறார்களில்லை; ப்ரஹ்ம ப்ராப்திக்கு த்வாரமாயிருக்கும் அர்ச்சிராதி மார்க்கத்தில் சென்று மறுபடியும் ஸம்ஸாரத்திற்கு வராததான உத்தம ஸ்தாநத்தை அடைகிறார்கள்' என்பதை விளக்குகிறார். இவ்விடத்திலும் 'ரயி' 'ப்ராணன்' இவைகளின் விபாகத்தைக் கண்டு கொள்ளவேணும். 'காம்ய கர்மங்களைச் செய்து முதல் மார்க்கத்தால் போனால் 'ரயி' என்று சொல்லப்படும் விஷய போகம் பலம்; நிஷ்காமர்களாகப் பகவானை உபாஸித்து இரண்டாவது மார்க்கத்தால் போனால் 'ப்ராண'னுக்கு ஆயதநமாக இருக்கும் பரமாத்மாவின் ப்ராப்தியே பலம் என்று அந்த விபாகம் வெளிப்படுகின்றது.

[ப - ரை.] **अथ** - பிறகு [இது மற்றொரு வாக்யத்தின் ஆரம்பத்தைக் காட்டுகின்றது], **ये** - எவர்கள், **तपसा** - காய க்லேஶாதிகளை லக்ஷணமாக வுடைய தபஸ்ஸைச் செய்து, **ब्रह्मचर्येण** - ப்ரஹ்மசர்ய வ்ரதத்துடனும், **श्रद्धया** - ஆஸ்திக்ய புத்தியுடனும், **विद्यया** - ஆத்ம வித்யையின் வழியாக, **आत्मानम्** - பரமாத்மாவை, **अन्विष्य** - தேடி, [**उपासते** - உபாஸிக்கிறார்களோ, **ते**-அவர்கள்], **आदित्यम्** - ஸூர்யனை, **अभिजयन्ते** - அடைகிறார்கள். [ஸூர்ய ஸம்பந்தியான லோகத்தை அடைவது அர்ச்சிராதி மார்க்கத்திற்கு அடையாளம்], **एतद्वै** - இந்த ஆத்மாதான் [கீழில் 'ப்ரஜாபதி' ஶப்தத்தால் நிர்த்திஷ்டனான பரமாத்மாவே], **प्राणानाम्** - ப்ராணனையுடைய ஸகல சேதநர்களுக்கும், **आयतनम्** - ஆதாரம். **एतत्** - இந்தப் பரமாத்மாவே, **अमृतम्**-அம்ருதம், **अभयम्**-நிர்ப்பயமான ஸ்தாநம்; **एतत्**-இதுவே, **परायणम्** - பரம ப்ராப்யம். **एतस्मात्** - இதிலிருந்து [அதாவது: இந்தப் பரமாத்மாவை அடைந்துவிட்டால் அதற்குப்பிறகு], [**उपासकाः** - உபாஸகர்கள்], **पुनः** - மறுபடியும், **न आवर्तन्ते** - திரும்புகிறார்களில்லை.

"पञ्चपादं पितरं द्वादशाकृतिं दिव आहुः परे अर्धे पुरीषिणम् ।
अथेमे अन्य उ परे विचक्षणं सप्त चक्रे षडर आहुरर्पितमिति ॥ ११ ॥

[அதாவது: மறுபடியும் ஸம்ஸாரத்திற்கு வருகிறார்களில்லை]. एषः - இந்தப் பரமாத்மா, निरोधः - [மறுபடியும் ஸம்ஸாரத்திற்கு வரவொட்டாமல்] தடுக்கிறவர். तत् - இதைப்பற்றி [இப்படி ஸம்வத்ஸராத்மாவாக இருக்கும் பரமாத்மாவைப்பற்றி], एष श्लोकः - [மேல் உதாஹரிக்கப்படப் போகும்] இந்த ஶ்லோகம்.

एष निरोधः என்னுமிடத்தில் 'एषः' என்பது கீழே ப்ரஸ்தாவிக்கப் பட்டுள்ள 'ப்ரஜாபதி' ஶப்த வாச்யனான பரமாத்மாவைப் பராமர்ஶிக்கின்றதாகையால், 'आत्मानमन्विष्य' என்னுமிடத்திலுள்ள 'आत्म' ஶப்தமும் அந்த ப்ரஜாபதி பரமென்றே ஸித்திக்கின்றது. 'एतद्वै' இத்யாதிகளில் 'एषः' என்பதும் ப்ரஜாபதியையே பராமர்ஶிக்கிறபடியால் புல்லிங்கமாக ப்ரயோகம் இருத்தல் வேண்டுமானாலும், விதேயமாகிற 'ஆயதந' ஶப்தத்தை அபேக்ஷித்து நபும்ஸக லிங்கமாக ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது.

இவ்விடத்தில் அர்ச்சிராதி கதி ஸமக்ரமாகச் சொல்லப்படாவிடினும், மற்றை இடங்களில் அபுநராவ்ருத்தியைக் காட்டும் அர்ச்சிராதி கதியே இவ்விடத்திலும் விவக்ஷிதமென்று ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள்.

---

11. 'ப்ரஜாபதி' ஶப்த வாச்யனான பரமாத்மா ஸம்வத்ஸராத்மகனென்பதை இது விளக்குகின்றது. (1) ஸம்வத்ஸரமென்னும் கால விஶேஷம் ஐந்து கால்களுடன் கூடியது. அவையாவன: வத்ஸரம் ஸம்வத்ஸரம் பரிவத்ஸரம் இடாவத்ஸரம் அநுவத்ஸரம் என்பவை. இவை அந்தக் காலவிஶேஷத்தின் ரூபங்களென்று ஸ்தலாந்தரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த ரூபங்கள் கால்களாக வர்ணிக்கப்படுகின்றன. வேறொரு ப்ரகாரமாகவும் இதை விளக்குவார்கள். அதாவது:— 'ருதுக்களுள் ஹேமந்த ருதுவையும் ஶிஶிர ருதுவையும் ஒன்றாகச் சேர்த்து ஒரே ருதுவாகப் பேசுவது உண்டு. அப்படிப் பார்த்தால் ஒரு வர்ஷத்தில் வஸந்தம், க்ரீஷ்மம், வர்ஷம், ஶரத், ஹேமந்த ஶிஶிரங்கள் ஆக ஐந்து ருதுக்கள் இருக்கிறபடியால் அவை கால்களாகப் பேசப்படுகின்றன' என்பதுதான். (2) அந்தக் காலவிஶேஷம் ஸகல பதார்த்தங்களுக்கும் உத்பத்தி ஸ்தாநம். (3) அது பன்னிரண்டு மாஸங்களாகிற ஆக்ருதியை உடையது. இவ்வாறு இருக்கும் அந்தக் காலம் 'த்யு' லோகத்திற்கு அப்புறத்தில் இருக்கும் 'புரீஷம்' என்று சொல்லப்படும் ப்ரஹ்மாண்ட கோளகத்தின் ஆவரணத்தைத் தனது ஸ்தாநமாக உடைத்தாயிருக்கின்றது. இவ்வாறு அதை அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். இவையெல்லாம் பரம புருஷனுக்கு அந்வயிக்குமாகையால் அவனை ஸம்வத்ஸராத்மகனென்று வர்ணிப்பது உபபந்நமே. இது ஒரு உபபத்தி.

"मासो वै प्रजापतिस्तस्य कृष्णपक्ष एव रयिः शुक्लः प्राणस्तस्मादेत ऋषयश्शुक्ल इष्टिं कुर्वन्तीतर इतरस्मिन् ॥ १२ ॥

மற்றுமொரு உபபத்தியும் இதில் சொல்லப்படுகின்றது. அது என்னவென்றால்:—ஸகல் ஜகத்தும் ஸம்வத்ஸர மென்னும் ரதத்தில் நிஶ்சலமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது என்பதுதான். ஸம்வத்ஸரத்தை ரதமாக வர்ணிப்பதற்கு, ரதம் சக்ரத்துடனும் அரங்களுடனும் கூடியிருப்பது போல ஸம்வத்ஸரமும் ஸூர்யன் முதலிய ஏழு க்ரஹங்களாகிற சக்ரத்துடனும் வஸந்த ருது முதலான ஆறு ருதுக்களாகிற அரங்களுடனும் கூடியிருக்கின்றது என்பது இடம் கொடுக்கின்றது. இவ்விதம் உபபத்தி சொல்வதில் ஜகத்திற்கு ஆதாரமாயிருப்பது ஸம்வத்ஸரத்திற்கும் பரமாத்மாவுக்கும் ஸமாந தர்மமாக நன்கு அமைவதால், இந்த உபபத்தி உத்க்ருஷ்ட மென்றும் இதையே காலதத்வத்தை அறிந்தவர்கள் சொல்லுகிறார்க ளென்றும் புகழ்ந்து பேசுகிறார். தத்வங்களை இம்மாதிரி விசித்ரமான ரூபணங்களால் வெளியிடுவது வேதத்தின் அழகு அமைந்த ரீதி.

[ப - ரை.] [ப்ரஸ்துத ஸம்வத்ஸரமானது] **पञ्चपादम्** - [வத்ஸரம் முதலிய, அல்லது வஸந்தம் முதலிய] ஐந்து கால்களை உடையதாகவும், **पितरम्** - எல்லாவற்றுக்கும் உத்பத்தி ஸ்தாநமாகவும், **द्वादशाकृतिम्** - [மாஸங்களாகிற] பன்னிரண்டு ஆகாரங்களை உடையதாகவும், **दिवः परे** - ஸ்வர்க்க லோகத்திற்கு அப்புறத்தில் இருக்கும், **अर्धे** - ஸ்தாநத்தில் [காணப்படும்], **पुरीषिणम्** - புரீஷ மென்னும் அண்டாவரணத்தை இருப்பிடமாக உடைத்தாயிருப்பதாகவும், **आहुः** - [அதை அறிந்தவர்கள்] சொல்லுகிறார்கள். [ப்ரஹ்மாண்டமாகிற கோளகத்திற்கு அநேக ஆவரணங்கள் உண்டென்றும், அவைகளுள் ஸ்வர்ண பூமிக்கு ஸந்நிஹிதமாக இருக்கும் ஆவரணத்திற்குப் 'புரீஷம்' என்று பெயரென்றும் ஶாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன]. **अथ** - மேலும் [இது மற்றொரு பக்ஷத்தைக் குறிக்கிறது], **अन्ये पर इमे** - [கீழ்ச் சொல்லப்பட்டவர்களைக் காட்டிலும்] மிகச் சிறந்தவர்களான வேறு இவர்கள் [காலதத்வம் அறிந்தவர்கள்], **सप्तचक्रे** - [ஸூர்யன் முதலிய] ஏழு சக்ரத்தை உடையவும், **षडरे** - [வஸந்த ருது முதலான] ஆறு ருதுக்களை உடையவும், [**संवत्सराख्ये रथे** - ஸம்வத்ஸரமாகிற ரதத்தில்], **विचक्षणम्** - த்ருடமாக, **अर्पितमिति** - [ஸகல ஜகத்தும்] ப்ரதிஷ்டிதமாக இருக்கிறதென்று, **आहुः** - சொல்லுகிறார்கள்.

---

12. பரமாத்வை ஸம்வத்ஸராத்மகனாக வர்ணித்துவிட்டு, இப்பொழுது, அவனை மாஸாத்மகனாகப் பேசுகிறார். இதுவும் உபாஸநா ஸௌகர்யத்தை உத்தேஶித்தே சொல்லப்படுகிறது.

[ப - ரை.] **मासो वै प्रजापतिः** - ப்ரஜாபதி ஶப்தவாச்யனாகிற பரமாத்மா மாஸாத்மகன். **तस्य** - அவனுக்கு, **कृष्णपक्ष एव रयिः** - க்ருஷ்ண பக்ஷமே ரயி; ['ரயி' என்பதால் குறிக்கப்படும் போக்யமான அசேதந

“ अहोरात्रो वै प्रजापतिस्तस्याहरेव प्राणो रात्रिरेव रयिः । प्राणं वा एते प्रस्कन्दन्ति ये दिवा रत्या संयुज्यन्ते । ब्रह्मचर्यमेव तद्यद्रात्रौ रत्या संयुज्यन्ते ॥

“ अन्नं वै प्रजापतिस्ततो ह वै तद्रेतस्तस्मादिमाः प्रजाः प्रजायन्त इति ॥

வர்க்கம்]; **शुक्लः प्राणः** - சுக்லபக்ஷமே ப்ராண ஶப்தத்தால் நிர்த்தேஶிக்கப்படும் போக்தா ; [அதாவது: போக்தாவாகிற சேதநவர்க்கம்]. [**यस्मात्** - எந்தக் காரணத்தால் ஶுக்ல பக்ஷமாகப் பேசப்படும் ப்ராண ஸ்தாநத்தில் இருப்பதால் ஏற்றமுள்ளதோ], **तस्मात्** - அந்தக் காரணத்தால், **एते ऋषयः** - [அதீந்த்ரிய விஷயங்களை அறியும் ஶக்தி வாய்ந்துள்ள] இந்தப் பெரியோர்கள், **शुक्ले** - ஶுக்ல பக்ஷத்தில், **इष्टिम्** - சுப கார்யங்களை, **कुर्वन्ति** - செய்கிறார்கள். **इतरे** - மற்றவர்கள் [அதன் ஏற்றத்தை அறியாதவர்கள்], **इतरस्मिन्** -மற்றொரு காலத்தில் [அஸாரமாயிருக்கும் க்ருஷ்ணபக்ஷத்தில்], [**इष्टिं कुर्वन्ति** - ஶுப கார்யங்களைச் செய்கிறார்கள்]. லோகத்தில் ஶுக்ல பக்ஷத்தை ப்ரஶஸ்த காலமாக ஜநங்கள் கொண்டாடுவதெல்லாம் அந்தப் பக்ஷம் ப்ராண ஸ்தாநமாயிருந்து அந்தக் காரணத்தால் ஏற்றமுள்ளதாக இருப்பதால்தான்.

——

13. இதில் பரமாத்மா அஹோராத்ராத்மகனாகப் பேசப்படுகிறார். அதில் இரவைக் காட்டிலும் பகலுக்கு இருக்கும் ஏற்றம் ஒரு லௌகிக அநுஷ்டாநத்தின் நிதர்ஶநத்தால் விளக்கப்படுகின்றது.

[ப - ரை.] **अहोरात्रो वै प्रजापतिः** - பரமாத்மா அஹோராத்ராத்மகன். **तस्य** - அவனுக்கு, **अहरेव प्राणः** - பகலே ப்ராணன்; **रात्रिरेव रयिः**- ராத்ரியே ரயி. [**यस्मात् अहः प्राणः** - எந்தக் காரணத்தால் பகல் ப்ராணனோ **तस्मात्** - அந்தக் காரணத்தால்], **ये** எவர்கள், **दिवा** - பகலில், **रत्या संयुज्यन्ते** - ஸ்த்ரீ ஸங்கமத்தைச் செய்கிறார்களோ, **एते** - அவர்கள், **प्राणं प्रस्कन्दन्ति वा** - ப்ராணனை ஶோஷணம் செய்கிறார்கள் [அதாவது - அவர்களுடைய ஆயுஸ் க்ஷயம் அடைகின்றது]. **यद्रात्रौ रत्या संयुज्यन्ते** - இரவில் அந்த ஸங்கமத்தைச் செய்வது என்பது யாதொன்று உண்டோ, **तत्** - அது, **ब्रह्मचर्यमेव** - ப்ரஹ்மசர்யமே [அதாவது - அது தோஷமன்று.]

——

14. ‘இந்த வர்ணநங்களெல்லாம், பரமாத்மாவினிடமிருந்தே ப்ரஜைகள் உண்டாகின்றன [அதாவது - பரமாத்மாவையே ப்ரஜைகளுக்கு உபாதாந காரணம்] என்பதை எப்படி விளக்குகின்றன? அதுவன்றோ ப்ரஸ்துதம்?’ என்பதற்கு ஸமாதாநம் சொல்லப்படுகின்றது. ‘ப்ரஜாபதி’ என்று சொல்லப்படும் ப்ரஹ்மமே அந்நமாகவும் அந்த அந்நத்திலிருந்து உத்பந்நமாகும் ரேதஸ்ஸாகவுமான அவஸ்தைகளை அடைகிறபடியால், எல்லா ப்ரஜைகளும் பரமாத்மாவினிடமிருந்தே உத்பத்தியை அடைகின்றன என்பது தான் அந்த ஸமாதாநம்.

"तद्ये ह तत्प्रजापतिव्रतं चरन्ति ते मिथुनमुत्पादयन्ते, तेषामेवैष ब्रह्मलोकः। येषान्तपो ब्रह्मचर्यं येषु सत्यं प्रतिष्ठितन्तेषामसौ विरजो ब्रह्मलोको न येषु जिह्ममनृतं न माया च" इति ॥ १५ ॥

इति प्रथमः प्रश्नः ॥

[ப - ரை.] **अन्नं वै प्रजापतिः** - அந்நம் பரமாத்மாவே [அதாவது:- பரமாத்மாவே 'அந்நம்' என்னும் அவஸ்தையை அடைந்திருக்கிறார்]; **ततो ह वै** - அந்த அந்நத்திலிருந்தே, **तद्रेतः** - அந்த ரேதஸ்ஸூம் [உண்டாகின்றது]; [ஆகையால்] **तस्मात्** - [அந்நாவஸ்தையையும் ரேதஸ்ஸின் அவஸ்தையையும் அடைந்திருக்கும்] அந்தப் பரமாத்மாவிடமிருந்து, **इमाः प्रजाः** - இந்த ப்ரஜைகள், **प्रजायन्ते** - உண்டாகின்றார்கள். [ஆகையால் பரப்ரஹ்மமே ஜகத்திற்கு உபாதாந காரணம் என்பது ஸித்தம்.]

---

15. இவ்வாறு தத்வத்தை நிருபித்துவிட்டு, முடிக்குமிடத்தில் புபுக்ஷுக்களாக இருக்கும் விஷய காமர்களை நிந்தித்து முமுக்ஷுக்களாயிருக்கும் ஆத்ம காமர்களைப் புகழ்ந்து பேசுகிறார்.

[ப - ரை.] **तत्** - ஆகையால், **ये** - எவர்கள், **प्रजापतिव्रतं** - ப்ரஜாபதி வ்ரதத்தை [ப்ரஜாபதி ஶப்தத்தாற் சொல்லப்படும் அந்நத்தைப் புஜிப்பதிலும் விஷய ஸுகத்தை அநுபவிப்பதிலும் நோக்குள்ளவர்களாய்] **चरन्ति** - செய்து வருகிறார்களோ; **ते** - அவர்கள், **मिथुनम्** - ப்ரஜைகளை, **उत्पादयन्ते** - உண்டுபண்ணுகிறார்கள். **एषः** - இந்த, **ब्रह्मलोकः** - [புத்ர பஶ்வாதிகளுடன்கூடிய கார்யாவஸ்தையை அடைந்திருக்கும்] ப்ரஹ்மரூபமான இந்த லோகமானது, **तेषामेव** - அவர்களுக்கே. **येषां** - எவர்களுக்கு, **तपः** - காய ஶோஷணமாகிற தபஸ்ஸூம், **ब्रह्मचर्यम्** - ப்ரஹ்மசர்யமும் [இருக்கின்றனவோ], **येषु** - எவர்களிடத்தில், **सत्यम्** - ஸத்யவசநமானது, **प्रतिष्ठितम्** - நிலைபெற்று ஸ்திரமாக இருக்கின்றதோ, **येषु** - எவர்களிடத்தில், **जिह्मम्** அநார்ஜ்ஜவமும், **अनृतम्** - அஸத்யவசநமும், **न** - இல்லையோ, [**येषु** - எவர்களிடத்தில்], **माया च न** - கபட ஸ்வபாவமும் இல்லையோ, **तेषां** - அவர்களுக்கே, **असौ** - இந்த, **विरजः** - தோஷமற்றிருக்கும், **ब्रह्मलोकः** - பரப்ரஹ்மரூபமான பலம் [கிடைக்கும்.]

ब्रह्मलोकः - இந்தப் பதம் இரண்டு இடங்களில் காணப்படுகின்றது. ப்ரகரணத்தை ஒட்டி, ஒன்றில் ஒரு அர்த்த விவக்ஷையும் மற்றொன்றில் வேறு அர்த்தமும் சொல்லப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. '**एष ब्रह्मलोकः**' என்பது முதல் ப்ரஹ்ம லோகத்தையும், **विरजो ब्रह्मलोकः** - [நிர்த்தோஷமான ப்ரஹ்மலோகம்] என்பது இரண்டாவது ப்ரஹ்ம லோகத்தையும் நிர்த்தேஶிக்கின்றன. இது இரண்டு ப்ரஹ்ம லோகங்களுக்குமுள்ள விஶேஷத்தை விளக்குகின்றது.

முதல் ப்ரஶ்நம் முற்றிற்று.

श्रीः

॥ प्रश्नोपनिषत् ॥

॥ द्वितीयः प्रश्नः ॥

अथ हैनं भार्गवो वैदर्भिः पप्रच्छ । "भगवन् कत्येव देवाः प्रजां विधारयन्ते ? कतर एतत् प्रकाशयन्ते ? कः पुनरेषां वरिष्ठः ?" इति ।

ஸ்ரீ:

இரண்டாவது ப்ரச்நம்

முதல் ப்ரச்நத்திற்கு ஸமாதாநமாகப் பரமாத்மாவே இந்த ப்ரஜைகளெல்லாவற்றுக்கும் உபாதாந காரணமென்பது விளக்கப்பட்டது. அந்தப் பரமாத்மாவுக்கு இந்த ப்ரஜைகளெல்லாம் ஶரீரபூதங்களென்றும் அம்மாதிரி பரமாத்மாவின் உபாஸநா ஸௌகர்யார்த்தம் அவனை அகண்ட காலாத்மகனாகவும் கண்ட காலாத்மகனாகவும் வர்ணித்து ஸமாதாநத்தை முடித்தார். இப்படி கபந்தியின் கேள்விக்கு ஸமாதாநம் சொல்லப்பட்டது. பிறகு பார்க்கவராகிற வைதர்ப்பி என்பவர் ப்ரச்நம் செய்கிறார். இந்த ப்ரச்நம் ஜீவாத்மாவின் ஸ்வரூப ஶோதநத்தைத் தாத்பர்யமாக உடையது. லோகத்தில் சில ஸாமாந்ய ஜநங்கள் தேஹத்தையே ஜீவனென்றும், மற்றும் சிலர் இந்த்ரியங்களையே ஜீவனென்றும், வேறு சிலர் மநஸ்ஸையே ஜீவனென்றும், இன்னும் வேறு சிலர் ப்ராணனையே ஜீவனென்றும் ப்ரமித்திருக்கிறார்கள். ஜீவன் என்னும் தத்வம் இவையெல்லாவற்றையும் காட்டிலும் விலக்ஷணன் என்பது இந்த ப்ரச்நத்தில் விளக்கப்படுகின்றது

1. [ப-ரை.] **अथ ह** - பிறகு [கபந்தியின் ப்ரச்நத்திற்குப் பிறகு], **एनम्** - இவரை [பிப்பலாதரை], **भार्गवो वैदर्भिः** - பார்க்கவ கோத்ரோத்பவரான விதர்ப்பருடைய குமாரர், **पप्रच्छ** - கேட்டார். "**भगवन्** - ஹே ஸ்வாமியே! **कति देवाः** - எவ்வளவு இந்த்ரியங்கள், **प्रजाम्** - ப்ரஜைகளை [ஸ்தாவரஜங்கமாத்மகமாக இருக்கும் இந்த ப்ரஜைகளை], **विधारयन्ते** - தரிக்கின்றன? [**तेषु** - அவைகளுள்], **कतरे** - எவை, **एतत्** - இதை [இந்த ஶரீரத்தை], **प्रकाशयन्ते** - ப்ரகாஶிப்பிக்கின்றன? **एषाम्** - இவைகளுக்குள், **कः पुनः** - எது, **वरिष्ठः** - ஶ்ரேஷ்டம்?

இவ்விடத்தில் மூன்று விஷயங்கள் ப்ரச்நம் செய்யப்பட்டிருக்கின்றன. அவையாவன :—(1) ப்ரஜைகளைத் தரிப்பது எது? (2) அவைகளை ப்ரகாஶிப்பிப்பது எது? (3) அவைகளுள் ஶ்ரேஷ்டம் எது? என்பவை. இதற்கு ஸமாதாநமாக ஒரு ஆக்யாயிகை சொல்லப்படுகின்றது.

ஸ்ரீ:

'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா'வின் 1944 ஜூன் மாதத்துச் சந்தா வஸூலில்.

1943-ம் ஆண்டுச் சந்தா

				ரூ.	அ.
78	ஸ்ரீ	R. க்ருஷ்ணஸ்வாமி, மாதுங்கா, பம்பாய்	...	3	0
204	,,	E. ராஜகோபாலாச்சாரியர், கோயம்புத்தூர்	...	3	0
282	,,	E. ராமாநுஜாசார்யர், திருவெவ்வுளூர்	...	1	0

1944-ம் ஆண்டுச் சந்தா

63	ஸ்ரீ	S. பெருமாள் ரெட்டியார், செவந்தாம்பட்டி	...	3	0
77	,,	K. வீரராகவ ஐயங்கார், வாங்கல்	...	3	0
114	,,	R. ஸ்ரீநிவாஸையங்கார், ஸ்ரீரங்கம்	...	3	0
116	,,	K. T. பார்த்தஸாரதி ஐயங்கார், வேலூர் (சேலம்)	...	3	0
167	,,	P. A. ஸ்ரீநிவாஸாசார்யர், பு. T. சென்னை	...	3	0
224	,,	T. N. வானமாமலை ஐயங்கார், ராஜபாளையம்	...	3	0
237	,,	N. வீரராகவாசார்யர், வீரவநல்லூர்	...	3	0
249	,,	L. C. ஸுந்தர வரதாசார்யர், சித்தூர்	...	3	0
251	,,	N. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கரூர்	...	3	0
280	,,	தீக்ஷிதர் நாராயணசார்யர், தில்லைஸ்தாநம்	...	3	0
282	,,	E. ராமாநுஜாசார்யர், திருவெவ்வுளூர்	...	2	0
297	,,	R. ஸாரநாதையங்கார், வ்ருத்தாசலம்	...	3	0
332	,,	S. ஸ்ரீநிவாஸாசார்யர், மோஹனூர்	...	3	0
383	,,	R. ஸ்ரீநிவாஸாசார்யர், புதுக்கோட்டை	...	3	0
402	,,	S. ரங்கம்மாள், தியாகராயநகர்	...	3	0
409	,,	V. ஸ்ரீநிவாஸையங்கார், உப்பிலியப்பன் ஸந்நிதி	...	3	0
444	,,	V. S. நரஸிம்ஹாசார்யர், நுங்கம்பாக்கம் (சென்னை)	...	3	0
448	,,	S. ஆழ்வார் ஐயங்கார், திருநெல்வேலி	...	3	0
550	,,	A. S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மேல்மாம்பலம்	...	1	8
597	,,	S. K ஸ்ரீநிவாஸாசார்யர், சோகத்தூர்	...	3	0
606	,,	M. S. விஜயராகவாசார்யர், சேலம்	...	3	0
607	,,	வராஹஸ்வாமி ஐயங்கார், கூவாஹம்	...	3	0
608	,,	M. K. ராமஸ்வாமி ஐயங்கார், மேட்டுப்பாளையம்	...	3	0
609	,,	M. B. விஜயராகவாசார்யர், சேலம்	...	3	0
610	,,	N. S. ராகவன், கோயம்புத்தூர்	...	3	0

ஸ்ரீ:

ஸ்ரீ மதுராந்தகம் சாஸ்த்ர பாடசாலைக்காக நன்கொடை யளித்தவர்கள்

				ரூ.	அ.
1.	ஸ்ரீமான்	C. V. பாஷ்யமையங்கார், கோயம்புத்தூர்	...	500	0
2.	,,	C. V. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், கோயம்புத்தூர்	...	100	0
3.	,,	M. S. கோவிந்தராஜ அய்யங்கார், ஏஜெண்ட், மோடார் கம்பெனி	...	50	0

Regd. No. M. ***4437***

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்களுக்கு ரூ. அ. பை	மற்றவர்கட்கு ரூ. அ. பை
1.	அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2.	ஷை (பைண்டில்லாதது) ...	5—8—0	6—8—0
3.	உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0-12—0	1—0—0
4.	உக்திநிஷ்டாபரணோத்யோதம் (,,)	0—8—0	0-12—0
5.	வீக்ஷாரண்யக்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	1—0—0	1—8—0
6.	ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் (,,)	0—8—0	0-12—0
7.	ஷை (தெலுங்கு லிபி)	0-12—0	1—0—0
8.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8—0	0-12—6
9.	ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3—0	0—4—0
10.	ஸ்ரீ பாஷ்யார்த்த மணிப்ரவாள தீபிகை (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
11.	ஸ்ரீ ராமாநுஜஸித்தாந்தஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
12	ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழிபெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0—0	1—8—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் கீழுள்ள விலாஸத்திற்கு எழுதவும் :—

மானேஜர், **ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், சென்னை.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami Street, Tyagarayanagar, Madras.